₹100/-

3 - 1

ஞானகுரு

# மகிழ்ச்சி

ஜனவரி 2024

எஸ்.கே.முருகன்




வது ஆண்டு சிறப்பிதழ்






ஆசிரியர் பக்கம்

# புதிய சபதத்துக்கு சியர்ஸ்...

ஒவ்வோர் ஆண்டு பிறக்கும் நேரத்திலும் புதிய பழக்கங்களை மேற்கொள்வதற்கு அல்லது பழைய பிரச்னைகளை ஒழித்துக்கட்டுவதற்கு நிறைய பேர் ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், இதனை ஒரு மாதம் கூட பலரும் கடைப்பிடிப்பதில்லை. ஆரம்ப நாட்களில் காட்டும் அக்கறையும் ஈடுபாடும் அடுத்தடுத்த நாட்களில் தேய்ந்து போய், ஒரு கட்டத்தில் சபதத்தைத் தூக்கி குப்பையில் போட்டுவிடுவார்கள்.

ஏன் புத்தாண்டு சபதங்கள் நிலைப்பதில்லை..?

தெளிவில்லாமலும் சரியான குறிக்கோள் இல்லாமலும் எடுக்கப்படும் சபதங்களை யாராலும் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது. நீண்ட காலமாக மது குடிக்கும் ஒரு நபர், இந்த ஆண்டு முதல் குடிக்க மாட்டேன் என்று பொத்தாம் பொதுவாக ஒரு சபதம் எடுத்தால், அதை செயல்படுத்துவது கடினம். அதற்குப் பதிலாக, இந்த ஆண்டிலிருந்து சனி, ஞாயிறுகளில் குடிக்க மாட்டேன், இரவு 9 மணிக்கு மேல் குடிக்க மாட்டேன் என்பது போன்று சபதம் எடுத்தால் நிச்சயம் கடைப்பிடிக்க முடியும்.

வழக்கமாக காலை 7 மணிக்கு எழுந்திரிக்கும் ஒரு நபர், இனி காலை 6 மணிக்கு எழுவதாக சபதம் எடுத்தால் கடைப்பிடிப்பது எளிது.. சட்டென்று காலை 5 மணி என்று சபதம் போட்டால், சில நாட்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாது. ஆகவே, இலக்கை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக நகரும்படியே புத்தாண்டு சபதம் இருக்க வேண்டும்.

இதெல்லாம் வீண் என நினைத்து சபதம் எடுக்காமல் விலகி நிற்பது சரியல்ல. சின்னச்சின்ன சபதங்கள் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தரும்.

காலையில் எழுந்தவுடன் புன்னகைப்பேன், தினம் ஒரு பழம் சாப்பிடுவேன், இரவு 10 மணிக்கு மேல் செல்போன் பயன்படுத்த மாட்டேன், மாதம் ஒரு புத்தகம் வாசிப்பேன், யாருக்கும் பொய் வாக்குறுதி தரமாட்டேன், குப்பைகளை தினமும் கொட்டுவேன், பிறர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கவலைப்பட மாட்டேன், என்றெல்லாம் சிம்பிள் சபதம் எடுத்திக்கொள்ளலாம்.

சுமார் 2 மாதங்கள் ஒரு செயலை தொடர்ந்து செய்யும்போது, அது சாதாரண நடைமுறையாக மாறி உங்கள் வாழ்க்கையை மேம்படுத்திவிடும். ஆக, சபதம் எடுங்க... சந்தோஷமா இருங்க.



ஆசிரியர்

# கருப்பு நிறத்துக்கு வெளிச்சப்

ஞானகுருவுடன் கல்லூரி மாணவ, மாணவியர்கள் சகஜமாக உரையாடிக்கொண்டு இருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு மாணவி பின்வரிசையில் நின்றுகொண்டு ஞானகுரு சொல்வதை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். அதேநேரம், முன்னே வந்து கேள்வி கேட்கத் தயங்குவதும் அவள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.

“இந்த ரோஜாக்கூட்டத்தில் ஒன்று மட்டும் ஏன் ஒதுங்கி நிற்கிறது…” என்று அந்த பெண் மீது பார்வையை செலுத்தினார் ஞானகுரு.

“ஹேய் செல்வி… உன்னைத்தான் சாமி கூப்பிடுறார்…” என்று சக மாணவிகள் அவளை முன்னே இழுத்து நிறுத்தி, ‘’இவ யார்கிட்டேயும் ஈஸியா பேசவே மாட்டா… கலரா இல்லைன்னு எப்பவும் கவலைப் பட்டுக்கிட்டே இருப்பா…” என்றார்கள்.

தாழ்வு மனப்பான்மை என்பது ஒருவர் தனக்குத்தானே தோண்டிக்கொள்ளும் சவக்குழி…” என்று ஞானகுரு தூண்டிவிட்டதும், செல்விக்கு கோபம் எட்டிப் பார்த்தது.

“நிறமா இல்லாதவங்களுக்குத்தான் அந்த வேதனை தெரியும்…” முணங்கினாள்.

”இந்த பேரண்டத்தில் ஒவ்வொன்றும் தனித்தனி இயல்புடன் திகழ்கின்றன. மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் தன்னை பிறருடன் ஒப்பிட்டு தாழ்த்திக்கொள்வதே இல்லை. மனிதகுலம் உருவான காலத்திலிருந்து பேரழகியாக கொண்டாடப்படும் கிளியோபட்ரா கருப்பு நிறம்தான் செல்வி…” என்று பேர் சொல்லி ஞானகுரு பேசியதும் பிள்ளைகளிடம் ஆரவாரம் எழுந்தது.

‘’புத்திசாலித்தனத்திற்காக கிளியோபட்ரா அழகியாக போற்றப்படுகிறாரே தவிர, நிறத்துக்காக அல்ல. உண்மையில் எல்லா பெண்ணும் பேரழகியே. ஒருவரது அழகு, அவரது மூளையால் தீர்மானிக்கப் படுகிறதே தவிர, தோல் நிறத்தினால் அல்ல. அழகுக்கும் நிறத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை ஒவ்வொரு பெண்ணும் மனதார நம்பவேண்டும் பெண்ணே…”



‘’ஆனா, எல்லா பசங்களும் நிறமா இருக்குற பொண்ணுங்களைத்தானே பார்க்குறாங்க…” என்று தயக்கத்துடன் கேட்டாள்.

‘’இது பெண்களின் கற்பனை. ஆண்களுக்கு வெள்ளை நிறப் பெண்களைத்தான் பிடிக்கும் என்றால் கருப்பு பெண்களுக்கு எல்லாம் திருமணமே நடக்கவில்லையா..? உன்னுடைய அம்மாவை, சகோதரியை கருப்பு என்பதற்காக பிரித்துப் பார்த்திருக்கிறாயா..? அழகு என்பது அவரவர் மனதில் மட்டுமே இருக்கிறது. எனவே நீயும் ஒரு அழகி என்பதை மனதார நம்பு. நிறத்துக்கும் அழகுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதையும் நம்பு. இதுவே உனக்கு தன்னம்பிக்கை கொடுக்கும், அந்த தன்னம்பிக்கையே உனக்கு அழகு தரும்…” என்றார்.

‘’தன்னம்பிக்கையை அதிகப்படுத்த என்ன செய்யவேண்டும்..?’’ மற்றொரு மாணவி கேள்வி கேட்டாள்.

‘’தன்னம்பிக்கையை மீட்பதற்கு குறுக்குவழி எதுவும் கிடையாது. எனவே, முதலில் நிஜத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வேண்டும். இதில் ஆரம்பத்தில் தோல்வி கிடைத்தாலும் மீண்டும் மீண்டும் ஈடுபட்டு, இந்த முயற்சியில் வெற்றி பெறுவது முக்கியம். விபத்தில் கால்களை இழந்தவர் முதலில் அந்த இழப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான், அவரால் அடுத்த கட்டத்துக்கு நகர முடியும். அதுபோல், செல்விக்கு கருப்பு நிறம் ஒரு பிரச்னை என்றால், அதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். கருப்பு என்பது ஒரு குறையல்ல என்பதையும் மனதார நம்ப வேண்டும்.


உடை மனிதர்களுக்கு அதீத நம்பிக்கை

தருகிறது. எனவே, தாழ்வு மனப்பான்மையில் தவிப்பவர்கள் தங்களுக்கு ஏற்ற சரியான, சிறப்பான ஆடைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தன்னம்பிக்கையை அதிகப்படுத்தும். அதேபோல் உடல் மொழியிலும் தன்னம்பிக்கை மிளிர வேண்டும். கூட்டத்தின் பின்னே நிற்பது, ஒதுங்குவது என விலகி நிற்காமல் தலை நிமிர்ந்து புன்னகையுடன் முன்னே வரும் நபருக்கு அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து வரவேற்கவே செய்வார்கள்.

உங்களைவிட நன்றாக படிப்பவர், உங்களைவிட நன்றாக விளையாடுபவர், உங்களைவிட அதிக வெற்றி அடைந்தவர்கள் நிச்சயம் இருப்பார்கள். அதற்காக அவர்கள் முன்பு தாழ்வு மனப்பான்மையுடன் குறுகி நிற்கத் தேவையில்லை. அவர்களை போலவே அல்லது அவர்களைத் தாண்டியும் வெற்றியடைய உங்களாலும் முடியும் என்று நம்புங்கள். உங்களுக்குத் தெரிந்த நிறைய விஷயங்கள், நீங்கள் செய்திருக்கும் செயல்களை நிறைய பேர் செய்தது இல்லை என்பதில் பெருமை கொள்ளுங்கள்.

நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுவது, எளிதாக கணக்கு போடுவது, மேடையில் தைரியமாகப் பேசுவது போன்றவை எல்லாமே நல்ல விஷயங்கள். ஆனால், இவை கைவரவில்லை என்று தாழ்வு மனப்பான்மை கொள்வதற்கு அவசியம் இல்லை. முயற்சியும் பயிற்சியும் இருந்தால் எல்லோராலும் இவற்றை சாதித்துவிட முடியும் என்று சொல்லிக்கொள்ளுங்கள்.

மற்றவர்களுக்கு நிறையத் தெரிந்திருக்கிறது, பிறவியிலே திறமையுடன் இருக்கிறார்கள் என்றெல்லாம் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். வேறு ஒருவர் செய்ய முடியும் என்றால் அதை உங்களாலும் நிச்சயம் செய்ய முடியும் என்று நம்புங்கள், உங்கள் தோல்விகளை, பயங்களை, சோகங்களை மற்றவர்களிடம் சொல்லி அவர்களிடம் இரக்கம் எதிர்பார்க்காதீர்கள். இதுவே தாழ்வு மனப்பான்மையை அதிகரிக்கிறது.



## மந்திரச்சொல்

எல்லோருக்கும் சொர்க்கம் போவதற்கு ஆசை உண்டு ஆனால், யாரும் மரணமடைய விரும்புவதில்லை.

பிறர் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதில்தான் தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. எனவே, மற்றவர்களைப் பற்றி எண்ணுவதை, சிந்திப்பதை, கவலைப்படுவதை கைவிடுங்கள். மற்றவர்களுக்கு உங்களைப் பற்றி எண்ணுவதற்கும் பேசுவதற்கும் நேரம் இல்லை. அப்படியே அவர் என்ன நினைத்தாலும், அதைப் பற்றி உங்களுக்கு ஒரு கவலையும் இல்லை என்பதில் உறுதியாக இருங்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் மட்டுமே வாழ முடியும். மற்றவர்களால் உங்களுக்கு எந்த பயனும் இருக்கப்போவதில்லை. ஆகவே, நிறம், தோற்றப் பொலிவு போன்றவற்றில் பிறருடைய கருத்துக்களை ஏற்கத் தேவையில்லை. அதேபோல் பிறர் அங்கீகாரம் தரவேண்டும் என்றும் எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் மிகச்சரியாகவும் சிறப்பாகவும் இருக்கிறீர்கள் என்று நீங்கள் மட்டும் நம்பினால் போதும்.

உங்களை யாரேனும் நிராகரிக்கும்போது, உங்கள் அன்பை மதிக்காத நேரத்தில் தன்னம்பிக்கை குறைந்துபோக அனுமதிக்காதீர்கள். உங்களை நிராகரிப்பவருக்குத் தான் அது இழப்பு என்று விலகிச் செல்லுங்கள். எல்லோருடைய வாழ்க்கையிலும் சோகம் இருக்கிறது, எல்லோருடைய வாழ்க்கையிலும் துன்பம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு முக்கியமான நபர் என்பதையும் உங்களால் எல்லாமே செய்ய முடியும் என்றும் தினமும் மந்திரம் போன்று சொல்லிக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு தவிர்க்கமுடியாத நபர், நீங்கள் நேரமையானவர், நீங்கள் புத்திசாலி, நீங்கள் வலிமையானவர், நீங்கள் எல்லாவற்றையும்விட மேலானவர், எந்த தோல்வியில் இருந்தும் உங்களால் மீண்டுவிட முடியும், எல்லாமே சரியாக நடக்கும், எல்லாமே வெற்றி தரும் என்றெல்லாம் வாய்விட்டு சொல்லிக்கொண்டே இருங்கள். தன்னம்பிக்கை வந்துவிடும், தன்னம்பிக்கை வந்துவிட்டால் வெற்றியும் மகிழ்ச்சியும் ஓடோடி வரும்” என்றார் ஞானகுரு.

செல்வியின் முகத்தில் ரோஜா மலர்ந்தது.





# கவித்துவம்

வலிகளை கொடுக்க
ஆயிரம் பேர் இருந்தாலும்..,
ஆறுதலை கொடுக்க
ஒருவர் இருந்தால்
எல்லாமே இலகுவாக
மாறிவிடும்..!!!

– மீ. இப்ரா யூசுப்.



# பணக்காரர்கள் நிலம் வாங்குகிறார்கள்... நடுத்தர வர்க்கத்தினர் வீடு வாங்குகிறார்கள்.



பணம் சம்பாதிப்பதற்காக நிறைய பேர் இரவும் பகலும் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு எதிர்பார்க்கும் அளவு பணம் கிடைப்பதே இல்லை... ஏன்..?

கடினமாக உழைப்பவர்கள், மாத சம்பளத்துக்கு பணியாற்றுபவர்களால் ஒருபோதும் பணக்காரராக முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய பயமும், பணம் பற்றிய அச்சமும் இருந்து கொண்டே இருக்கும். நாளை சாப்பிடுவதற்கு உணவு கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்து பயந்து கடுமையாக உழைக்கிறார்கள். குறைந்தபட்ச பணம் சம்பாதிக்கவில்லை என்றால் குடும்பம் பசியில் சிக்கிவிடும், வாங்கிய கடனை கொடுக்கவில்லை என்றால் அவமானமாகி விடும் என்றெல்லாம் அச்சத்தில் தவிப்பவர்களுக்கு, ஒருபோதும் மனம் புத்திசாலித்தனமாக செயல்படுவதில்லை. அதனால்தான், அவர்கள் வாழ்நாள் முழுக்க உழைத்துக்கொண்டே இருப்பார்கள். உழைப்பதை தவிர வேறு எந்த வழியும் அவர்களுக்குத் தென்படாது.

உங்கள் சுற்றுவட்டார மனிதர்களை ஆழ்ந்து பாருங்கள். மிகவும் கடுமையாக உழைப்பவர்கள் எல்லோருமே ஏழையாகவே இருப்பார்கள். கொஞ்சம் ஸ்மார்ட்டாக யோசிப்பவர் நடுத்தர வாழ்க்கையில் இருப்பார். தனக்கு பணம் சம்பாதிப்பதற்காக சில நபர்களை வேலைக்கு அமர்த்தியிருப்பவர் பணக்காரராக இருப்பார். ஆகவே, கடுமையான உழைப்பே உயர்வு தரும் என்ற பழங்கதை இங்கே செல்லுபடியாகாது.

பசி பற்றிய அச்சத்திலிருந்து வெளியே வந்து பணம் சம்பாதிப்பது குறித்து யோசிப்பவரால் மட்டுமே அடுத்த கட்டத்துக்கு நகரவே முடியும். அப்படி வெறுமனே ஸ்மார்ட்டாக சிந்திப்பது மட்டும் போதுமா.....?

சிந்தனை பணமாக மாறும் என்பது முக்கியம். ஆனால், அந்த சிந்தனையை ஆக்கபூர்வமாக மாற்றுவதர்கு அனுபவமும் அவசியம். ஒரு மாட்டுப்பண்ணை வைத்திருப்பவர், தினமும் பணம் சம்பாதிப்பதை கண் கூடாகப் பார்க்கலாம். அதற்காக உடனே 10 மாடுகளை வாங்கி பண்ணை வைத்து விட்டால், பணம் கொட்டுவது உறுதியில்லை. ஏனென்றால் மாட்டுப் பண்ணையை நடத்த வேண்டும் என்றால், மாடுகள் பற்றிய அறிதலும் அனுபவமும் வேண்டும்.

சம்பளத்துக்கு வேலை செய்பவர் பண்ணை வைக்க ஆசைப்படுகிறார் என்றால், வீட்டில் ஒரு மாடும் கன்றும் வாங்கி வளர்க்கலாம். அவற்றுக்கு என்னவெல்லாம் தீவனமாகக் கொடுக்க வேண்டும், எப்படிப்பட்ட மருத்துவக் கவனிப்பு தேவைப்படும், எப்படியெல்லாம் பாதுகாக்க வேண்டும், பராமரிப்புக்கு எவ்வளவு செலாவாகும் என்பதையெல்லாம் அறிந்து கொண்ட பிறகு, வங்கியில் கடன் வாங்கி பண்ணை வைத்தால், மாடுகளை வளர்ப்பது எளிதாக இருக்கும். பணமும்கொட்டும். எனவே,மாட்டுப்பண்ணையில் லாபம் கிடைக்கும் என்று நினைப்பது மட்டும் போதுமானது அல்ல. மாட்டுப் பண்ணை நடத்துவதற்கு அனுபவங்களை பெற வேண்டியதும் அவசியம். தனக்கு எந்த துறையில் ஆர்வமும் அனுபவமும் இருக்கிறதோ, அந்த துறையில் போதிய அனுபவத்துடன் இறங்குபவர் நிச்சயம் செல்வந்தர் ஆகலாம்.

## மந்திரச்சொல்

தங்கள் சக்திக்கு மீறி
நடப்பதைப் பார்த்து, சிரிக்கத்
தெரிந்தவனே ஞானி.

இப்படி ஒரு நிலை வந்துவிட்டால், அதன்பிறகு எந்த பிரச்னையும் இல்லாமல் நிம்மதியாக இருக்க முடியுமா..?

அப்படியெல்லாம் சொல்லிவிட முடியாது. திடீரென மாடுகளுக்கு நோய் தாக்குதல் நிகழலாம். தீவனம் கிடைப்பதில் சிக்கல் வரலாம், காரணமின்றி பால் சுரப்பு குறையலாம். இப்படி ஏதேனும் சிக்கல் நிகழ்ந்துகொண்டே இருக்கும். இவற்றைக் கண்டு அச்சம் அடைபவர்கள் ஒட்டுமொத்தமாக தோற்றுப் போகிறார்கள். கொஞ்சம் பணம் செலவழித்து இன்சூரன்ஸ் போட்டவர்கள் இதிலிருந்தும் மீள முடியும். இப்படி எல்லா வற்றிலும் புத்திசாலித்தனத்தை பயன்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். எல்லா காலத்திலும் முழு சேமிப்பையும் முதலீடு செய்துவிடாமல் சிறு பணத்தையாவது எதிர்காலத் திற்கென ஒதுக்கி வைத்திருக்க வேண்டும். உபரி பணம் கிடைக்கும் போது பணக்காரர்கள் நிலம் வாங்கிப் போடுகிறார்கள். பராமரிப்பு இல்லாமலே அந்த நிலத்தின் மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டே இருக்கும்.

ஆனால், உபரி பணத்தின் அருமை தெரியாத ஏழைகள், தங்களுக்குக் கிடைத்திருக்கும் பணத்தை வங்கியிடம் கொடுத்து, அதிக மதிப்புள்ள வீடு வாங்கி கடனாளியாக மாறுகிறார்கள். அந்த கடனை தங்கள் சொத்து என்று நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அது, நிஜ சொத்தாக மாறும் காலம் வரை நிம்மதியை இழக்கிறார்கள், அதேநேரம் நிலம் வாங்கியவர்கள் நம்பிக்கையில் மிதக்கிறார்கள், பெரும் செல்வந்தராக மாறுகிறார்கள்.

எனவே, பணம் வேண்டும் என்பதற்காக உழைக்காதீர்கள்... யோசியுங்கள். அதுவே, பணம் வரும் வழி.

# தனியாக யாரும் ஜெயிக்க முடியாதுங்க

“எனக்கு யாரும் உதவி செஞ்சதே இல்லை, நானாத்தான் படிச்சு, ஜெயிச்சு இந்த இடத்தைப் பிடித்திருக்கிறேன். அதனால உறவுகள், நண்பர்கள்ன்னு யாரையும் நம்பி ஏமாந்துட்டு இருக்காதீங்க...” என்று நிறைய பேர் அட்வைஸ் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.

வகுப்பில் முதல் மாணவர் என்றாலும், முதல் தலைமுறை பட்டதாரி என்றாலும், வம்சத்திலேயே முதன்முதலாக அரசு ஊழியராக நுழைந்தவர் என்றாலும், தன்னுடைய தனித் திறனால் ஓட்டப்பந்தயத்தில் வென்றவர் என்றாலும், அது நிச்சயம் தனி மனித சாதனையல்ல. எந்த ஒரு மனிதராலும் தனித்து நின்று சாதனை படைத்துவிட முடியாது. ஏனென்றால் ஒருவர் வெற்றி அடைவதற்கு அவரது திறமை மட்டுமின்றி குடும்ப உறுப்பினர்கள், பல்வேறு வகையிலான மனிதர்கள், சூழ்நிலை போன்ற காரணிகள் சாதகமாக அமைய வேண்டியிருக்கிறது.

எந்த ஒரு வெற்றிபெற்ற மனிதர்களை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்தாலும் இந்த உண்மைகளை கண்டுகொள்ள முடியும். கம்யூட்டர் என்றாலே நமக்கு ஞாபகத்தில் வரும் நபர் பில்கேட்ஸ். மைக்ரோசாப்ட் நிறுவனத்தை தொடங்கி உலகப்புகழ் கோடீஸ்வரராக மாறியவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், இவருக்கு சூழ்நிலை எப்படியெல்லாம் உதவியது என்று ஆழ்ந்து நோக்கினால் ஆச்சர்யமான தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

அவர் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் கம்யூட்டர் என்பது ஓர் முழு அறையிலும் வைத்து செயல்படுத்தும் அளவுக்குப் மிகப்பெரியதாக இருந்தது. அப்படியொரு கம்ப்யூட்டர் அவர் படித்த கல்லூரியில் இருந்தது என்பதும், அந்த கம்ப்யூட்டரை பயன்படுத்துவதற்கு 13 வயதினிலே பள்ளி நிர்வாகம் அவரை அனுமதித்தது என்பதை கணக்கிட்டு பார்த்தால், இந்த வாய்ப்பு அந்த காலத்தில் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கும் என்பதையும், அவர் தேர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்ததையும் அறியலாம்.

அதேபோல், நாராயண மூர்த்தி இன்போசிஸ் நிறுவனத்தைத் தொடங்குவதற்கு நான்கு நண்பர்கள் உறுதுணையாக நின்றார்கள். ஒவ்வொரு நபரும் ஒரு துறையில் திறமை பெற்று விளங்கினார்கள். ஒரு கட்டத்தில் நாராயண மூர்த்தி தனி நபராக ஜெயித்துவிட்டார் என்றாலும், துவக்கப்பட்ட காலகட்டத்தில் அந்த நண்பர்கள் உதவி இல்லையென்றால், அவரால் முன்னேறியிருக்க முடியாது. இப்படி எத்தனையோ மனிதர்களும், சூழ்நிலைகளும் வெற்றியாளர்களுக்கு உதவிகரமாக இருக்கின்றன.

உதாரணத்திற்கு நமக்குத் தெரிந்த விஜய் சேதுபதி, யோகிபாபு ஆகிய நடிகர்களை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்க்கலாம்.

விஜய் சேதுபதி என்ற நடிகர் ஜெயித்து முன்னணி நட்சத்திரமாக வருவதற்கு அவரது திறமை மட்டுமே காரணமல்ல. ஏனென்றால் அவரை விட திறமையாக நடிக்கக்கூடிய எத்தனையோ நடிகர்கள் இன்னமும் தலை காட்டவும் வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறார்கள். அன்று சில நண்பர்கள், வளர்ச்சியடையாத சில இயக்குநர்கள் விஜய் சேதுபதி மீது நம்பிக்கை வைத்து நடிக்க வைத்தது முக்கியமான காரணம். பத்தோடு

www.gyanaguru.com






www.gyanaguru.com

உருவக் கேலி படங்களே இவருக்கு அமைந்தன என்றாலும், அதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டார். இவரும் நல்ல படங்களை தேர்ந்தெடுத்து நடித்து வெற்றி பெறவில்லை. வாய்ப்பு கிடைக்கும் அத்தனை படங்களிலும் நடிக்கிறார். வெற்றிகள் கிடைக்கும் வரை நடித்துக்கொண்டு இருப்பார்.



ஒருவராக பல படங்களில் வந்துபோனார் என்றாலும் நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு தென்மேற்கு பருவக்காற்று, பீட்ஷா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், சூது கவ்வும் போன்ற வித்தியாசமான புத்தம் புதிய கதை அம்சங்களுடன் கூடிய படங்கள் அமைந்தன.

இங்கு ஒரு விஷயத்தை நன்கு கவனிக்க வேண்டும். அதாவது, இந்த படங்களின் கதையைக் கேட்டு, சிறந்ததை தேர்வு செய்து விஜய் சேதுபதி நடிப்பதற்கு ஒப்புக்கொள்ள வில்லை. இதுபோன்ற வித்தியாசமான பரீட்சார்த்த ரீதியிலான படங்கள் அவரை தேர்ந் தெடுத்தன. இதுவே சாதனையாளர் களுக்கு அமையும் சரியான சூழல். இந்த படங்களுக்குக் கிடைத்த வரவேற்பினால் விஜய் சேதுபதியும் வெற்றி அடைந்தார்.

சினிமாவில் வாய்ப்பு தேடிய காலத்தில் உதவிய நண்பர்களை விஜய் சேதுபதி வெற்றிக்குப் பிறகும், உச்ச இடத்திற்கு வந்த பிறகும் மறக்கவில்லை. நல்ல சினிமா கலைஞர்களை நண்பர்களாக பெற்றிருந்ததால், நிஜ நாடகம் போன்ற இயக்கங்களின் தாக்கத்தினால் அவரது அணுகுமுறை மற்ற ஹீரோக்களின் அணுகுமுறையில் இருந்து வித்தியாசமாக இருந்தது. ஹீரோவாகத்தான் நடிப்பேன் என்றெல்லாம் அடம் பிடிக்காமல் எல்லா வகையிலான வேடங்களிலும் நடிக்கத் தொடங்கினார். அதனாலே விஜய் சேதுபதியால் கமல்ஹாசன், விஜய் போன்றவர்கள் படங்களிலும், இந்தி படங்களிலும் நடிக்க முடிகிறது.

தமிழ் சினிமாவில் எந்த ஒரு நடிகரும் தொடாத ஒரு வித்தியாசமான உயரத்தை விஜய் சேதுபதி தொட்டிருப்பதற்கு, அவருடைய புதிய அணுகுமுறையும் ஒரு காரணம். ஆரம்ப காலத்தில் அவருடன் இருந்த நல்ல நண்பர்களின் தாக்கத்தினாலே விஜய் சேதுபதிக்கு இப்படியொரு வித்தியாசமான பாதையை கண்டறிய முடிந்தது. இந்த கூட்டு முயற்சியே இவரது பெரும் வெற்றிக்குக் காரணம்.

அதேபோல் விஜய் டி.வி. லொள்ளுசபா நிகழ்ச்சியில் நடித்து, 'யோகி' படத்தில் அறிமுகமானவர் பாபு. சினிமா உலகில், 'யோகி' படத்தின் மூலம் அறிமுகமானதால் தன்னுடைய பெயரை யோகி பாபு என்று மாற்றிக்கொண்டார். கிட்டத்தட்ட ஏழெட்டு வருடங்கள் சினிமா வாய்ப்புக்கு அல்லாடிக்கொண்டு இருந்தார். யாமிருக்க பயமேன், மான் கராத்தே போன்ற படங்கள் அடையாளம் காட்டும் வகையில் அமைந்த பிறகு கோலமாவு கோகிலா, பரியேறும் பெருமாள் மூலம் சர்ரென டாப் லிஸ்ட்டுக்குப் போய்விட்டார்.

உருவக் கேலி படங்களே இவருக்கு அமைந்தன என்றாலும், அதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டார். இவரும் நல்ல படங்களை தேர்ந்தெடுத்து நடித்து வெற்றி பெறவில்லை. வாய்ப்பு கிடைக்கும் அத்தனை படங்களிலும் நடிக்கிறார். வெற்றிகள் கிடைக்கும் வரை நடித்துக்கொண்டு இருப்பார்.

எத்தனையோ இளம் நடிகர்கள் விஜய் சேதுபதி, யோகி பாபு பாணியில் சினிமாவில் அறிமாகிக்கொண்டே இருக்கிறார்கள். நல்ல அறிமுகம் கிடைத்தாலும் தொடர்ந்து சரியான படங்கள் அமையவில்லை என்றதும் காணாமல் போகிறார்கள். இந்த நடிகர் நடித்தாலே படம் ஓடாது, இவர் ஹீரோவாக நடிப்பதற்கு சரிப்பட மாட்டார் என்றெல்லாம் ஓரங்கட்டப் படுகிறார்கள். இப்படி அறிமுகமாகும் அல்லது அறிமுகத்துக்குப் போராடும் நடிகர்களிடம் போதிய திறமை இல்லை என்று சொல்லிவிட முடியாது. இவர்களுக்கு ஏற்ற சூழ்நிலை, சரியான படங்கள் இன்னமும் அமையவில்லை, அவ்வளவுதான்.

இதை அதிர்ஷ்டம் என்றும் ஒரேயடியாக சொல்லிவிட முடியாது. ஏனென்றால், திறமை இல்லாதவர்கள் ஜெயிப்பதுதான் அதிர்ஷ்டம். லாட்டரி சீட்டு போன்று யாரோ ஒருவருக்கு திடீரென வாய்ப்பு கிடைப்பது அதிர்ஷ்டம். ஆனால், இங்கு திறமை நிரம்பியிருந்தாலும் ஒருசில திறமையாளர்களே வெற்றி பெறுகிறார்கள். அந்த வெற்றிக்கு காலநிலை மற்றும் பல்வேறு நபர்கள் உதவி செய்கிறார்கள். சிலர் அறிந்தும் சிலர் அறியாமலும் உதவுகிறார்கள்.

நன்றாக கவனித்துப் பார்த்தால், இன்று மாபெரும் வெற்றிபெற்றுள்ள பெரும் வணிக நிறுவனங்கள் எல்லாமே ஆரம்ப காலத்தில் பல்வேறு நபர்கள் இணைந்து கூட்டு முயற்சியில் தொடங்கியதாகவே இருக்கும். உலகின் மிகப்பெரும் கோடீஸ்வரராக கருதப்படும் பில் கேட்ஸ், ஸ்டீவ் ஜாப், நாராயணமூர்த்தி ஆகிய அனைவருமே தங்களுடன் பல்வேறு நபர்களை சேர்த்துக்கொண்டே தொழில் தொடங்கினார்கள். ஏனென்றால், ஒரு தொழில் நல்ல முறையில் ஜெயிக்க வேண்டும் என்றால் அங்கே பல்வேறு திறமை கொண்ட மனிதர்கள் வேண்டும்.

தொழில் குறித்து நல்ல அறிவும், புரிதலும் தொழில்நுட்பமும் இருப்பவர்களால் மட்டுமே ஜெயித்துவிட முடியாது. அவர்களுடன் நல்ல ஆலோசகர், நல்ல நிர்வாகி, நல்ல ஆதரவாளர், நல்ல உழைப்பாளி போன்றவர்களும் உடனிருக்க வேண்டும். பிரமாண்டமாக ஹோட்டல் தொழில் தொடங்கி, சுவையான உணவு கொடுத்த எத்தனையோ பேர், தொழிலாளர்களை வைத்து வேலை வாங்க முடியாமல் தோற்றுப்போன வரலாறு நிறையவே உண்டு.

**மந்திரச்சொல்**

நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது, மகிழ்ச்சியாக இருந்தால் நிலைமை மாறிவிடும்.





வீடுகளிலும் ரோட்டோரங்களில் விற்கும் இட்லி, சட்னிகள் தரமாக இருப்பதுண்டு. ஆனால், முருகன் இட்லி கடை பெற்ற வெற்றியை எல்லோரும் அடையமுடியவில்லை. அது ஏனென்றால், அங்கே கூட்டு முயற்சியாக பல்வேறு சாதக அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. நகரத்தின் பிரதான இடத்தில் கடை, தரமான உணவு, புன்னகையுடன் வேலை பார்க்கும் ஊழியர்கள், குளறுபடியில்லாத நிர்வாகம் என நிறையவே அந்த வெற்றிக்குப் பின்னே இருக்கின்றன.

ஒரு நிறுவனத்தின் தலைவர் கோபக்காரர் என்றாலும் தொழிலாளர்களிடம் தன்மையாகப் பேசி வேலை வாங்கும் ஒரு நிர்வாகி அவரிடம் இருக்க வேண்டியது அவசியம். சம்பளம் கொடுக்கிறார் என்பதற்காக தேவையின்றி திட்டு வாங்குவதற்கு தொழிலாளர்கள் விரும்ப மாட்டார்கள். அதேபோல், தொழில் சிக்கல் இல்லாமல் நடக்க வேண்டுமென்றால், அரசுக்கு கட்டவேண்டிய கட்டணங்கள், வரி போன்றவற்றை முறையாக கட்டுவதற்கும், பணத்தை நிர்வகிக்கவும் நல்ல மேலாளர் ஒருவர் தேவை. சரியான தேதியில் சம்பளம் வழங்காமல், முறையாக வரி கட்டாமல் இருந்தால் எத்தகைய நிறுவனம் என்றாலும் இழுத்து மூடப்படவே செய்யும்.

ஒரு பொருள் நன்றாக விற்பனை ஆகிறது என்றாலும், அந்த நிறுவனம் குறிப்பிட்ட காலகட்டத்தில் அடுத்தகட்ட வளர்ச்சி அடைந்தால் மட்டுமே, அது நீடிக்க முடியும். ஆகவே, இதற்காக திட்டமிடும் நபரும் ஆலோசனை கூறும் அனுபவசாலிகளும் நிறுவனத்தில் இருக்க வேண்டும். மற்ற நிறுவனங்களைவிட புதிய பாதையில் எப்படி பயணிக்கலாம் என்று வழிகாட்டும் ஆலோசகர்களும் நிறுவனத்திற்குத் தேவை.

மேலிடத்தில் தலைவர் தவறு செய்வது தெரிந்தாலும், அதை சுட்டிக்காட்ட முடியாமல் கீழ்மட்ட நிர்வாகிகள் அமைதி காப்பதுண்டு. இதனாலே பல நிறுவனங்கள் தோற்றுப்போயிருக்கின்றன. தலைவர் என்றாலும் அவர் தவறு செய்யும்போது சுட்டிக்காட்டி, சரியான வழிக்கு கொண்டுசெல்லும் நம்பிக்கையானவர்களும் நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

நிறுவனத்தில் ஒருசில நேரங்களில் கடினமான முடிவுகள் எடுக்கவேண்டியிருக்கும், அனுபவசாலிகள் அல்லது அதிக சம்பளம் வாங்கும் நபர்களை வெளியேற்றினால் மட்டுமே நிறுவனம் தாக்குப்பிடிக்கும் எனும் நிலை ஏற்படும். அதுபோன்ற தருணங்களில் அந்த முடிவை உறுதியாக செயல்படுத்துவதற்கும் நம்பிக்கையான மனிதர்கள் தேவைப்படுவார்கள். எத்தனை பெரிய நிறுவனத்திலும் சில தருணங்களில் பணப்பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அதுபோன்ற தருணங்களில் அவசர உதவி செய்வதற்கும் வழி காட்டுவதற்கும் பொருளாதார ஆலோசகர்கள் தேவை. அதோடு அரசியல்வாதிகள், அக்கம்பக்கத்து மனிதர்கள் ஆகியோரை அனுசரித்துச் செல்லும் நிர்வாகிகளும் நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

இத்தனை பேரும் இணைந்து நிற்கும்போதுதான், அது வெற்றிகரமான நிறுவனமாக செயல்பட முடியும். அந்த நிறுவனத்தின் தலைவர், 'நான் சுயமாக முன்னேறி ஜெயித்திருக்கிறேன்...' என்று மேடையில் ஜம்பமாகப் பேசலாம். ஆனால், கீழே இருக்கும் மனிதர்களின் ஒத்துழைப்பு காரணமாகவே அந்த இடத்தில் இருக்கிறார் என்பதே உண்மை. ஆகவே தொழிலதிபர் மட்டுமல்ல, எல்லோருக்குமே பிற மனிதர்களின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை,.

உயிர் வாழ உதவும் அத்தியாவசியத் தேவைகளான உணவு, ஆடை, வீடு, கார், அலைபேசி என எல்லாமே பிற மனிதர்களின் உழைப்பினால் உருவானவையே. இவற்றை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு, 'நான் தனித்து ஜெயித்தேன், எனக்கு யாரும் உதவவில்லை' என்று கூறுவது நல்ல நகைச்சுவை.


தனிமையில் மனிதர்கள் உயிர் வாழலாமே தவிர, ஜெயிக்க முடியாது. ஆகவே, சக மனிதர்களை நேசிப்பதும், அனுசரிப்பதுமே நல்வாழ்வு.

www.gyanaguru.com
www.gyanaguru.com

# திருடர்களே இல்லாத ஊர்





தனி ஒரு மனிதன் நல்லவனாக இருந்தால் அவனுடைய குடும்பம் சிறப்படையும். ஒரு குடும்பம் நன்றாக இருந்தால், அந்த தெரு சிறப்படையும். அந்த தெரு நன்றாக இருந்தால், அந்த ஊர் சிறப்படையும். அப்படியொரு நல்ல ஊர் என்ற பெயரும் பெருமையும் பெற்றிருக்கிறது, நம் தமிழகத்தைச் சேர்ந்த அழகிய பெரிய பொக்கம்பட்டி கிராமம். மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே 13 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது இந்த கிராமம். சுமார் 200 குடும்பங்கள் வசிக்கும் இந்த ஊர் விவசாயத்தை நம்பியே இருக்கிறது. எப்போதும் திறந்தே கிடக்கும் கதவுகளைக் கொண்ட இந்த ஊரில், சமீபத்தில் ஒரு திருட்டு நடந்தது. ஆனால், அதன்பின் நடந்ததே பெரும் திருப்பம்.

என்ன நடந்தது என்பதை விளக்குகிறார் ஊரைச் சேர்ந்த முதியவர் சீனிவாசன். ”எங்க ஊர்ல தோடு, மூக்குத்தி, செயின், கொழுசு, பணம்னு ஏதாச்சும் காணாம போனா, ஊர் தண்டோரா போட்டு சொல்லுவோம். அன்னைக்கு யாரும் வெளியூர் போக மாட்டாங்க. தொலைஞ்சு போனது சின்னப் பொருளாக இருந்தால் சாணி உருண்டையை உருட்டி வீடு வீடா கொண்டு போய் கொடுப்போம். அதை திருப்பி வாங்கும்போது, காணாமல் போன பொருள் வந்துரும்.

ஆனா, இப்போ நடந்தது பெரிய திருட்டு. எங்க ஊரைச் சேர்ந்த ராகவன், பாண்டியம்மாளோட வீட்ல இருந்து 26 பவுன் நகைகளும் 20 ஆயிரம் பணத்தையும் யாரோ எடுத்துட்டாங்க. வழக்கம்போல ஊர்க் கூட்டம் போட்டோம். அதேநேரம், போலீஸ் வரச்சொன்னோம். மதுரையில் இருந்து மோப்ப நாய் வந்தது. அது வடக்கு தெற்கு பக்கம் ஓடிட்டு கிழக்கு பக்கமாக திரும்பவும் எங்க ஊருக்குள்ளே வந்து படுத்துருச்சு. அதை வைச்சுத்தான் திருடன் வெளியில் இருந்து வரல உள்ளூர்ல தான் இருக்கான்னு நினைச்சோம். ஆனா, எங்க ஊருக்கு கெட்ட பெயர் வாங்கிக்கொடுக்க விரும்பல, அதனால எங்க டெக்னிக்கை பயன்படுத்தி பொருளை மீட்கப் பார்க்கிறோம், கிடைக்கலைன்னா நீங்க வாங்கன்னு சொன்னோம்.

ஊர் தண்டோரா போட்டு, வீடு தவறாம 300 தபால் கவர் கொடுத்தோம். வெள்ளிக்கிழமை ராத்திரி எங்க ஊருக்கு எட்டு மணி பஸ் வந்துட்டு போனதும் ஊர்ல இருக்கிற பள்ளிக்கூடத்தில் இரண்டு பித்தளை அண்டாவை வச்சுட்டு தெரு விளக்குகளை எல்லாம் அணைச்சுட்டோம். பள்ளிக்கூடத்தை சுத்தி இருக்கிற வீடுகளில் எரியுற லைட்டுகளையும் அணைக்க சொல்லிட்டோம்.

அதன்பிறகு ஒவ்வொருத்தரா வந்து பள்ளிக்கூடத்துல இருந்த அண்டாவுல நாங்க கொடுத்த கவரை போட்டாங்க. அண்டா இருக்கிற இடத்துலேயும், வெளியிலும் யாரும் நிக்க மாட்டோம். ஊருல எல்லோரும் கவரை போட்டது உறுதியானதும் தெரு லைட்டு போடச் சொல் லிட்டோம். அண்டாவுல இருந்த கவரை எடுத்து பார்த்தப்ப 23 பவுன் நகை மட்டும் கிடைச்சது.

பணம் கிடைக்கலைன்னதும் நாங்க மனம் தளரலை. அடுத்த நாளும் இதே போல எல்லா வீட்டுக்கும் கவர் கொடுத்தோம். அதேபோல அண்டாவுல எல்லோரும் கவரை போட்டாங்க. இப்ப, காணாம போன பணமும் கிடைச்சிடுச்சு. போலீஸ் நுழைஞ்சு எங்க கிராமத்துல கெட்ட பெயர் ஆகிடாம எல்லாம் நல்லபடியா முடிஞ்சு போச்சு. எங்க ஊர் மக்கள் எல்லோரும் நல்லவங்கதான்... ஏதோ திடீர்னு யாருக்கோ தப்பு பண்ணத் தோணிருச்சு... நாங்க நம்பிக்கை வைச்சதும் அவங்களும் திருப்பிக் கொடுத் துட்டாங்க. எங்க ஊருல திருடங்களே இல்லைங்கிறது எங்களுக்கு ரொம்பவே பெருமை...’’ என்றார். உண்மை. திருட்டு நடந்ததும் போலீஸ், ரெய்டு என்று போகாமல் நம்பிக்கையுடன் ஊர் மக்கள் நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள். அந்த திருடன் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத் திருக்கிறார்கள். ஏனென்றால் போலீஸ் கண்டுபிடித்திருந்தால், திருடன் என்ற பட்டம் விழுந்து ஒரு குடும்பமே பெரும் அவச்சொல்லுக்கு ஆளாகியிருக்கும். அந்த பழிச்சொல் காலம் முழுக்கவே அழியாது. அந்த குடும்பத்தை திருட்டு குடும்பமாகவே மற்றவர்கள் பார்ப்பார்கள். இந்த நடவடிக்கை மூலம் அவன் திருந்துவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

திருட்டு நடந்துவிட்டால் அதை எப்படி மீட்பது என்றும், மனிதர்கள் மீது நம்பிக்கை வைப்பது எப்படி என்றும் உலகிற்கே பாடம் நடத்தியிருக் கிறது, அழகிய பெரிய பொக்கம்பட்டி கிராமம்.

இந்த பாதையும் பயணமும் தொடரட்டும். .

இதுவே, மகிழ்ச்சி.

## மனிதனுக்கு பிரியாணி... கோழிக்கு மரணம்...

# இதுதான் கடவுள் லீலையா..?

இந்த உலகை படைத்தது யார்..? இத்தனை பிரமாண்டமாக, இத்தனை சிறப்புகளுடன், இத்தனை அழகுணர்ச்சியுடன், இத்தனை வடிவங்களை, இத்தனை உயிர்களை யாரால் படைத்திருக்க முடியும்..?

கடவுள்தான் இந்த உலகை படைத்தார் என்றால் அவருக்கு எத்தனை சிறப்பான கற்பனா சக்தி இருக்க வேண்டும். அவர் எப்பேர்ப்பட்ட திறமைசாலியாக இருக்க வேண்டும்..? இத்தனை அற்புதம் செய்த கடவுள் இப்போது என்ன செய்கிறார்..?

எங்கெல்லாம் அநீதி இழைக்கப் படுகிறதோ அங்கெல்லாம் அவதாரம் எடுத்து வருவேன் என்ற கடவுளின் வாக்குமூலம் உண்மை யில்லையா..? நாடு முழுவதும் வன்முறையும் கொடூரங்களும் நடக்கும்போது கடவுள் வரவில்லையே... அப்படியென்றால் எங்கே கடவுள்..? இந்த உலகை கடவுள் படைத்தார் என்றால் கடவுளை படைத்தது யார்..?



கடவுள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியாமலே கடவுளைப் பற்றி உலகமெங்கும் மக்கள் பேசுகிறார்கள். அதேநேரம், கடவுள் என்ற சொல்லுக்கான உண்மை அறிந்தவர்கள் யாருமே இல்லை. கடவுளை பார்த்தவர்கள் யாரும் இல்லை. கடவுள் இருப்பதற்கான ஆதாரம் காட்டியவர்கள் யாரும் இல்லை. ஆனால், உலகெங்கும் ஆண்டவருக்கும் அல்லாவுக்கும் இந்து கடவுள்களுக்கும் வழிபாட்டு தலங்கள் நரம்பி வழிகின்றன. ஒவ்வொரு மதத்தையும் கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றுகிறார்கள். காலகாலமாக கடவுளை விதவிதமான நெறிமுறை களுடன் வழிபட்டு வருகிறார்கள். தங்கள் கடவுள் மட்டுமே உயர்ந்தவர் என்று சொல்லிக்கொண்டு பிற மதத்தினரை கொன்று குவிக்கிறார்கள். இதை எந்த கடவுளும் ஒருபோதும் தடுத்து நிறுத்தியதில்லை, தட்டிக் கேட்டதுமில்லை. கடவுள் இல்லை என்று ஒரு கும்பல் காலம்காலமாக கத்திக்கொண்டு இருந்தாலும், கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களே எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

இவர்கள் பெற்றோர் வழியை பின்பற்றுபவர்கள். ஏன் என்று எந்த கேள்வியும் கேட்காமல் தங்கள் மதக் கோட்பாடு களை ஏற்றுக்கொள்பவர்கள். விரதம் இருக்கிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள். கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்கிறார்கள். இப்படியெல்லாம் செய்தால் கடவுள் அருள் கிடைக்கும் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை என்றாலும் பின்பற்றுகிறார்கள்.


கடவுள் என்ற வார்த்தையைக் கேட்டால், திருத்தலங்களைக் கண்டால் கன்னத்தில் போட்டுக்கொண்டு நகர்கிறார்கள். இப்படி செய்தாலும் கடவுள் அருள் கிடைக்கும் என்று நம்புகிறார்கள்.

கடவுள் கொடுக்கும் பரிசிலும் ஏகப்பட்ட குழப்பங்கள் இருக்கிறது. ஏனென்றால், மனிதனுக்கு பிரியாணி கொடுப்பதற்கு அருள் புரியும் கடவுள் ஒரு கோழிக்கு அநீதி செய்கிறார் என்று யாரும் நினைப்பதில்லை.

அதுசரி, கடவுள் பற்றி அறிவியல் என்ன சொல்கிறது..?

இந்த பூமி சுமார் 460 கோடி வருடங்களுக்கு முன்பு உருவாகியிருக்க வேண்டும் என்பதுதான் அறிவியலார் கணக்கு. இந்த காலகட்டத்தில் பல லட்சம் வடிவத்திலான உயிரினங்கள் தோன்றி, அப்படியொரு உயிரினம் இருந்ததற்கான எந்த சுவடும் இல்லாமல் அழிந்தும் போயிருக்கின்றன. உலகம் உருவான 460 கோடி வருடங்களை ஒரு 24 மணி நேரக் கடிகாரத்தில் கொண்டுவந்து சுருக்கிப் பார்த்தால், அந்த 24 மணி நேரத்தின் கடைசி சில நிமிடங்களில்தான் மனிதன் என்றொரு உயிரினம் உருவாகியிருக்க வேண்டும். அந்த உயிரினம் தோன்றிய தருணங்களில் கடவுள் என்று யாரும் பேசியிருக்க வாய்ப்பு இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மனிதன் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கற்றுக்கொண்டான். அப்போதுதான் கடவுள் என்ற ஒன்றை உருவாக்கியிருக்க வேண்டும். அப்படி கணக்குப் பார்த்தால், இந்த பூமிப்பந்துக்கு கடவுளின் வயது கால் தூசுதான்.

கடவுளுக்கு முன்னரே பிறந்த மனிதர்கள் தங்களை இந்த பூமியின் ரட்சகர்களாக எண்ணிக்கொள்கிறார்கள். ஒரு புறம் தங்கள் வசதிக்காக பூமியை அழித்துக்கொண்டே, இன்னொரு புறம் பூமியை காப்பாற்றுவதற்கு கோஷம் போடுகிறார்கள். பூமியை அழிப்பவர்கள் என்றாலும், பூமியைக் காப்பவர்கள் என்றாலும் ஒட்டுமொத்த மனிதர்களையும் இந்த பூமி ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை என்பதுதான் உண்மை. ஏனென்றால் ஒரு பூகம்பமோ, பெரும்புயலோ உருவானால் உலகிலுள்ள அத்தனை மனிதர்களும் ஒரேயடியாக அழிந்து போவதற்கு வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. சூரியனிலிருந்து ஒரு தீவிரமான வெப்ப அலை உருவானால் ஒட்டுமொத்த உயிரினங்களும் அழிந்து போகலாம். இப்படிப்பட்ட இக்கட்டான



தருணங்களில் மனிதர்களைக் காப்பாற்றுவதற்கு கடவுள் வருவாரா என்பதுதான் கேள்வி..? ஏனென்றால் மனிதனின் கூக்குரலை இயற்கை மதிக்கப்போவதே இல்லை. மனிதன் மட்டுமின்றி, எந்த ஒரு உயிரினத்தையும் தக்க வைக்க வேண்டும் என்ற நோக்கமும் ஆர்வமும் இயற்கைக்குக் கிடையாது.

மனிதன் இல்லையென்றால் கடவுளும் அழிந்தே போவார். அந்த கடவுளை காப்பாற்றவும் இயற்கை வரப்போவதில்லை. ஆகவே, இன்றைய தருணத்தில் மனிதனைவிட, கடவுளைவிட, இயற்கையே மிகப்பெரியது. அதேநேரம், மனிதனைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இயற்கை இயங்கவில்லை என்பதும் உண்மை. எனவே, மனிதன் இல்லாமலும், கடவுள் இல்லாமலும் இயற்கை இயங்கிக்கொண்டேதான் இருக்கும்.

மனிதனுக்குத்தான் கடவுள் தேவைப்படு கிறானே தவிர, இயற்கைக்கு இல்லை. மனிதனைத் தவிர எந்த உயிருக்கும் கடவுள் தேவைப்படவில்லை. உயிர்களிலேயே உன்னதமானவன் என்று தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளும் மனிதன், கடவுள் கோட் பாட்டில் மற்ற அத்தனை உயிரினங் களையும்விட கீழானவனாக இருக்கிறான்.

ஆக, கடவுளின் நிலையும் பரிதாபம்தான்.

**மந்திரச்சொல்**

தோல்விகளுக்கான காரணங்களைக் கண்டறியாதவர்களால் வெற்றியைத் தொட முடியாது.

www.gyanaguru.com

www.gyanaguru.com

# நெருக்கடிகளை ஜெயித்துவிட்டால் மாயாஜாலம்


எத்தனை உற்சாகமான மனிதர் என்றாலும், உடல் நலன் பாதிக்கும்போது ஒட்டுமொத்தமாக தங்கள் சக்தியை இழந்துவிடுகிறார்கள். மனதளவில் சோர்வடைந்து, தங்களால் செய்வதற்கு எதுவுமே இல்லை என்று நத்தை போன்று ஓட்டுக்குள் முடங்கிவிடுகிறார்கள்.

இப்படித்தானே காலம் காலமாக நடக்கிறது. மனிதர்கள் வேறு என்ன செய்ய முடியும் என்று கேட்கிறீர்களா..?

இதற்கு, ஆண்டனி பர்ஜஸ் என்ன செய்தார் என்று தெரிந்துகொள்வதே பதில்.

ஆங்கில நாவலாசிரியரும் விமர்சகருமான ஆண்டனி பர்ஜஸ்க்கு தொடர்ந்து உடல்நலப் பிரச்னை ஏற்படவே, முழு உடல் பரிசோதனை செய்துகொண்டார். அப்போது, அதாவது அவரது 40வது வயதில் மூளையில் ஒரு கட்டி வந்திருப்பது கண்டறியப்பட்டது. அந்த கட்டி வளர்ந்த நிலையில் இருந்தது என்பதுடன் அறுவை சிகிச்சைக்கும் வழியில்லை. ஆகவே, இன்னும் ஓர் ஆண்டு தாக்குப்பிடிப்பதே கடினம் என்று மருத்துவர்கள் நாள் குறித்தார்கள்.


தனது மரணத்தைப் பற்றி ஆண்டனி ரொம்பவும் கவலைப்படவில்லை. ஆனால், தன்னுடைய காலத்திற்குப் பிறகு தன் மனைவிக்கு பொருளாதார சிக்கல் வந்துவிடக்கூடாது என்று யோசித்தார். ஏனென்றால், அது வரையிலும் அவர் உருப்படியாக பணம் சம்பதிக்கவில்லை, சேமிப்பும் கிடையாது.



இன்னும் ஓர் ஆண்டு மட்டுமே இருக்கும் நிலையில், தனக்குத் தெரிந்த வழியில் எப்படி வேகமாக பணம் சம்பாதிக்க முடியும் என்று யோசித்தார். அந்த காலகட்டத்தில் நாவல் விற்பனை கொடி கட்டிப் பறந்தது. நாவல் எழுத்தாளர்கள் நல்லபடியாக சம்பாதித்துக் கொண்டு இருந்தனர். எனவே, முதன்முறையாக நாவல் எழுதத் தொடங்கினார்.

ஒரே ஆண்டில் அதிக நாவல் எழுதினால் அதிக பணம் கிடைக்கும் என்பதால் முழு நேரமும் அவசரம் அவசரமாக ஐந்து நாவல்களை எழுதி முடித்தார். அந்த நேரத்தில் அவரது உடல் நலனை பற்றி கொஞ்சமும் அவர் சிந்திக்கவே இல்லை. ஐந்து நாவல்களை முடித்தபிறகு பரிசோதனை மேற்கொண்டார். அப்போது ஆச்சர்யமாக அவரது மூளையில் இருந்த கட்டியின் அளவு குறையத் தொடங்கியிருந்தது. இதனை மருத்துவர்களும் ஆச்சர்யமாகப் பார்த்தார்கள். அதன்பிறகும் அவர் எழுதுவதை நிறுத்த வில்லை. எழுதிக்கொண்டே இருந்தார். அவரது 76 வயது வரையிலும் உயிர் வாழ்ந்த ஆண்டனி 70 நாவல்கள் எழுதி முடித்தார். இதுதான் நோயை எதிர்கொள்ளும் மனநிலை.

.நமக்குள் மறைந்திருக்கும் ஆற்றலை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். வாழ்க்கையில் சில நெருக்கடிகளை துணிச்சலோடு எதிர்கொள்ளும்போது மாபெரும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். எனவே, போராடத் தயங்கவே வேண்டாம்.





www.gyanaguru.com



# புத்தர் காலத்தில் அல்லா எங்கே போயிருந்தார்..?

இறைவன் என்ற கருத்தில் புத்தர் ஒருபோதும் உடன்படவில்லை. அதனாலே அவர் யாரையும் வழிபடச் சொல்லவில்லை. புத்தர் தன்னை கடவுளின் பிரதிநிதியாக அல்லது தன்னையே கடவுளாக கூறியிருக்கலாம். அப்படி கூறியிருந்தால் இன்று உலகத்திலேயே மிகப்பெரும் மதமாக புத்த மதம் திகழ்ந்திருக்கும் என்கிறார் குளச்சல் மு. செய்யது. அவரது கட்டுரையை படித்துப் பாருங்கள்.

உலகில் அனைத்தையும்.அனைத்து மக்களையும் அல்லாஹ் படைத்தான் என்கிறீர்கள். புத்தர் என்ற ஒரு சித்தர் இயேசுகிறிஸ்துவுக்கு சுமார் 500 வருடங்களுக்கு (கிட்டத்தட்ட 3000 வருடங்களுக்கு முன்பு) முன் வாழ்ந்தவர். அவர் எந்த கடவுளை பற்றியும் தெரிவிக்கவில்லை...

அதற்கு முன்னர் அல்லாஹ். கடவுள். இறைவன். ஆண்டவர் இப்படி யாருமே இருப்பதாக, வாழ்ந்ததாக தகவல் இல்லை. காரணம். புத்தர் வாழ்ந்த காலத்தில் அல்லா என்று எந்த தெய்வமும் உலகில் இல்லை. புத்தருக்கு பிறகு வந்த சில மனிதர்கள் அதிகமாக கற்பனை கடவுள்களை பற்றி போதித்து விட்டு சென்று விட்டனர்... அதையே மனிதன் தொங்கி கொண்டு வருகிறான்....

புத்தர் நினைத்தால் நான் கடவுளின் மகன் என்னையறியாமல் ஒருத்தனும் கடவுளை கட்டிப் பிடிக்க முடியாது என்று சொல்லி இருக்கலாம். ஆனால், புத்தருக்கு பொய் சொல்லத் தெரியவில்லை. அப்படி அவர் அன்று பொய் சொல்லி இருந்தால் இந்நேரம் உலகில் 90% மக்கள் புத்தரை வழிபட்டு கொண்டிருப்பார்கள்.... இது 100% உண்மை.

புத்தருக்கு முன்பு ஆதாம், இப்ராஹிம், சுலைமான், நூகு, யூசுப் என்று லட்சக்கணக்கான நபிமார்களை (இறைத்தூதர்கள்) பற்றி ஓவர் ரீல் விடுறாங்க. இவர்கள் வாழ்ந்த காலத்தில் என்ன அதிசயம் நடந்தது..? இயேசு. முகம்மது நபியை தவிர மற்ற அனைத்து இறைத்தூதர் என்ற கற்பனை கதாநாயகர்கள் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்து என்ன பிரயோஜனம்..?

இப்ராஹிம் தனது நான்காவது காதல் மனைவி சாராவின் மகன் இஸ்மாயிலை அல்லாவுக்கு பலி போட கத்தியை கழுத்தில் வைத்த உடன் கிளைமாக்ஸ்ல அல்லாஹ் வந்து, ‘இப்ராஹிமே… என் அன்பு மகனே… உன் பாசத்தை கண்டு மெச்சினேன். உருகி போனேன்டா. உலகில் ஒரு பயலும் உன்னை போல் வர மாட்டான்டா.... எனக்காக உன் மகனையே பலி கொடுக்க பாத்தியேடா.... வேண்டாம்டா... இந்த விபரீத விளையாட்டு. அங்கே பார். ஒரு ஆடு அந்த ஆட்டை அறுத்து எனக்கு மட்டன் பிரியாணி போடுடா மவனே...’ என்றுதான் வருகிறது. இந்த ஒரு சம்பவம் மட்டும் தான் இப்ராஹிம் கதை. இந்த கதை மனிதனுக்கு என்ன பாடத்தை தருகிறது?

இப்ராஹிம் போல தான், இறைத்தூதர் என்ற கற்பனை கதாநாயகர்கள். எதற்காக இத்தனை இறைத்தூதரை தேவையில்லாமல் அல்லாஹ் பூமிக்கு அனுப்பினான். அவர்களால் மனிதன் அடைந்த நன்மை என்ன....? தான் படைத்த மனிதர்கள் நேர் வழியில் வாழ வேண்டும், பாவங்கள் புரியக் கூடாது,

## மந்திரச்சொல்

மகிழ்ச்சியுடன் வாழ்வதைவிட,
சிறந்த சாதனை வேறு
எதுவுமில்லை.

என்னை பற்றி மற்ற மனிதர்களிடம் சொல்லி இஸ்லாமியனாக வாழ வேண்டும் . இது தான் அல்லாவின் ஆசை, கனவு, லட்சியம்.

அல்லாஹ் ஆசைப்படுவதில் தப்பில்லை, இத்தனை இறைத்தூதரை படைத்து உலகில் அனுப்பி வைத்ததில் இதுவரை உலகில் பாவங்களையோ, கொலை, கொள்ளை, கற்பழிப்பு இவற்றை இன்னும் மனிதன் விடவில்லையே... மனிதனை நேர் வழிபடுத்த இன்று வரை முடிய வில்லையே...??? எல்லா மக்களும் முஸ்லிம்கள் ஆகவில்லையே.... ஏன்...?

புத்தருக்கு பிறகு வந்த மனிதன் தான் கற்பனை கடவுள்கள் பற்றி ரீல் விட ஆரம்பித்து விட்டான். அதன் பிறகு வந்த சில மேதாவி மனிதர்கள் அளவுக்கு அதிகமான கப்ஸா கதைகளை அவிழ்த்து விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் விட்டு சென்ற கற்பனை கடவுள்களை இன்றும் மனிதன் பிடித்து கொண்டு வருகின்றான். நாளைய சமுதாயத்தையும் தலைமுறைகளையும் முட்டாள் ஆக்குகின்றான்.

மதம் என்ற மாயை வலையில் விழுந்து கற்பனை கடவுளை வணங்கி வருகின்றனர். இதற்கு ஒரே காரணம், மனபயம். இறந்த பிறகு என்ன நடக்கும்..? நாம் இப்பவே. அந்த இறைவனை வணங்கி வந்தாலே போதும். நம்மை நிச்சயம் ஏதாவது ஒரு வழியில் இறைவன் காப்பாற்றுவான் என்று ஒரு நம்பிக்கை மட்டும் மனதில் ஓடி கொண்டிருக்கும். அதனுடைய வெளிப்பாடு தான் இறை வழிபாடு.

மனிதனுக்கு பயம் இருக்க வேண்டும்... ஒரேயடியாக பய உணர்வு இல்லாமல் போனாலும் உலகில் எந்த மனிதர்களும் வாழ முடியாது. பசி, காமம், ஏக்கம், துக்கம், பகை உணர்வு போல் த பய உணர்வும் மனிதனின் முன்னோர்களின் மரபை (மரபணுக்கள்) பொறுத்து மாறுபடும். ஆகவே மனிதனை நினைத்தால் போதும் என்கிறார் குளச்சல் மு.செய்யது.

இவர் சொல்வது உண்மையே. புத்தர் காலத்தில் அல்லாவோ சிவன், விஷ்ணுவோ இல்லை. அவருக்குப் பின்னே தோன்றியவர்கள் எப்படி எல்லாம் வல்ல கடவுளாக மாற முடியும் என்பதே கேள்வி.

www.gyanaguru.com





ஞானகுரு தரிசனம்

# பூனையின் கண்களுக்கு பேய் தெரியுமா..?

மாணவர்களிடம் ஞானகுரு இயல்பாக உரையாடிக் கொண்டிருந்தார்.


“சாமி... பூனைக்கும் பேய்க்கும் ஏதாவது தொடர்பு இருக்கா? எல்லா இங்கிலிஷ் படத்துலயும் அப்படித்தான் காட்டுறாங்க” என்றான் ஒருவன்.

“நம் மக்கள் மழை, மரம், மாடு, குரங்கு, மயில், பாம்பு, குத்துக்கல் என்று கண்ணுக்குத் தெரிந்ததை எல்லாம் கடவுளாக பார்க்கிறார்கள். ஆனால், வெளிநாட்டவர்கள் கண்களுக்கு எல்லாமே சாத்தானாகப் தெரிகிறது. அதனால் கருப்புப் பூனை, வெள்ளிக்கிழமை, பதின்மூன்றாம் எண், கல்லறைத் தோட்டம், துடைப்பம், முகம் பார்க்கும் கண்ணாடி, நிழல் என்று எல்லாமே அவர்களுக்கு சாத்தான். தும்மல் போட்டால் கூட ‘இறைவன் ஆசிர்வதிக்கட்டும்’ என்பார்கள். ஏனென்றால், தும்மும் போது வெளியேற முயற்சிக்கும் உயிரை, அப்படிச் சொன்னால்தான் இறைவன் நிறுத்தி வைப்பாராம்.

இந்த உலகில் கடைசி மனிதன் இருக்கும் வரை மூடநம்பிக்கையும் இருந்து கொண்டுதான் இருக்கும். ஏனென்றால் மனிதனைப் பொறுத்தவரை பிரமிப்பீட்டும் எல்லாம் இறைவன், பயம் தருவது எல்லாம் சாத்தான். இதில் கருப்பன், வெள்ளையன் என்று வித்தியாசம் கிடையாது” என்று ஞானகுரு பேசிக்கொண்டு இருந்த நேரத்தில், நாலைந்து போலீஸார்கள் பந்தோபஸ்துடன் ஆறேழு பேர் கொண்ட ஒரு குடும்பம் மிடுக்காக கடந்துசென்றது. அதன் தலைவர் சாதாரண உடையில் இருந்தாலும் காவல்துறை உயரதிகாரி என்பது புரிந்தது.


www.gyanaguru.com

# பூனையின் கண்களுக்கு பேய் தெரியுமா..?



மாணவர்கள் நடுவே ஞானகுருவை பார்த்த ஒரு போலீஸ்காரன், அவரை பல நூற்றாண்டுகளாகத் தெரிந்தவன் போன்று கதை விட்டான்.

“சார்.... இவர் தான் குற்றாலத் துறவி, இவரைப் போல நிறைய பேர் காட்டுக்குள்ள திரிவாங்க..” என்று சுற்றுலா பயணிக்கு, கூண்டு மிருகத்தை அடையாளம் காட்டுவது போன்று சொல்லிவிட்டு நகர்ந்தான். தலையை மட்டும் அசைத்தபடி சென்ற அதிகாரி, அவரது மனைவியிடம் ஏதோ சொன்னார். சில நிமிட வாக்குவாதத்திற்குப் பிறகு, அந்த குடும்பம் அப்படியே திரும்பி ஞானகுருவிடம் வந்தது.

“வணக்கம்... உங்களை தொந்தரவு செய்யுறோம்” என்றபடி அருகே வந்தார். போலீஸ்காரர்கள் உடனே மாணவர் குழுவை அதட்டி விரட்டியது. உடனே ஞானகுரு, “குளிப்பதற்கே துணை தேடும் அளவுக்கு பயந்தவரா நீங்கள்?” என்று கேள்வியை வீசிவிட்டு, ஒரு சிகரெட்டை பற்றவைத்தார். ஒரு கணம் யோசித்தவர், உடனே அத்தனை காவலர்களையும், அவர்களுடைய வேலையைப் பார்க்குமாறு அனுப்பிவிட்டு ஞானகுருவிடம் பேசத் தொடங்கினார்.

“சாமி நான் எபநேசர், சென்னையில பெரிய போலீஸ் அதிகாரியா இருக்கேன். இது என் மனைவி அருணா தேவி. இது என் பையன், மருமகப் பொண்ணு, இவன் தம்பி, அவங்க ரெண்டு பேரும் என் பையனோட ஃபிரண்ட்ஸ். நான் கிறிஸ்தவன், அருணா இந்து, ஆனாலும் எங்க காதலுக்கு மதம் குறுக்கே வரலை. ரெண்டுபேர் வீட்லயும் சிக்கல் இருந்திச்சு, ரொம்பவும் சண்டைபோட்டு காத்திருந்து கல்யாணம் செஞ்சுக்கிட்டோம். நாங்க இரண்டு பேருமே அடுத்தவங்க மதத்தில தலையிடுறது இல்லை. அதனால எங்க வீட்ல இரண்டு மத பண்டிகையும் விஷேசமா நடக்குது” என்று அனைவரையும் அறிமுகம் செய்தார்.

“எனக்கும் கிறிஸ்தவத்தில் ஒரு நண்பன் இருக்கிறார்” என்று புகையை வெளியே விட்டார்.

“யார் சாமி..?”

“அவரை உனக்கும் தெரிந்திருக்கும். ஏழைகளிடமும், குழந்தைகளிடமும் இரக்கம் காட்டுபவர். பெண்களையும், நோயாளிகளையும் கனிவோடு பார்க்கிறவர், அநியாயக் காரர்களை தைரியமாக எதிர்ப்பவர், பாவங்கள் செய்பவரை மன்னிப்பவர். அதனால் ரத்தம்கூட சிந்தியிருக்கிறார்”

“அப்படி ஒருத்தரா.. எனக்குத் தெரியவில்லை என்பது ஆச்சர்யமாக இருக்கிறதே?” என்று இழுத்தார்.

“அவர் பேர் இயேசு கிறிஸ்து” என்றதும் குடும்பத்தினர்கள் ஆச்சர்யத்துடன் அருகே வந்து அமர்ந்தார்கள். எபிநேசர் படக்கென்று காலில் விழுந்தார்.

“உங்களை ரொம்பவும் சாதாரணமா நினைச்சுட்டேன். இப்படி அடுத்த மதத்தை மதிப்பதற்கு மக்களுக்குச் சொல்லிக் கொடுத்திட்டீங்கன்னா, நாட்டுல மதக்கலவரமே வராது. உங்களை சந்திச்சது சந்தோஷமா இருக்குது. ஊர்ல அளவுக்கதிகமா ராத்திரி பகலா வேலை பார்த்து ரொம்பவும் களைப்பாயிட்டேன். அதான் நாலைஞ்சு நாள் ஓய்வு எடுக்கலாம்னு, குடும்பத்தோட கிளம்பி வந்துட்டேன்” என்றார்.

“மனிதர்களுக்கு ஓய்வு எடுக்கவே தெரியாதே...”

“ஏன்... இப்படிச் சொல்றீங்க சாமி”

“ஓய்வு எடுப்பதாகச் சொல்லி, நீ மலை மீது ஏறும் கடுமையான வேலை செய்து கொண்டு இருக்கிறாய். உன்னைப் போலத்தான் பலரும் நிம்மதியாக இருக்கிறேன் என்று டி.வி. பார்த்து தேவையில்லாதவற்றை தலையில் ஏற்றிக் கொள்கிறார்கள். இசை கேட்டு, புத்தகம் படித்து, தோட்டம் போடுவது என்று எதையாவது செய்வதையே ஓய்வு என்கிறார்கள். உண்மையில் மனிதர்களால் உறக்கத்தின் போது மட்டுமே ஓய்வு எடுக்க முடியும்”

ஆச்சரியமானார். “நீங்க சொல்றது சரிதான் சாமி. ஆனா எங்களை மாதிரி போலீஸ்காரங்க இப்படி ஏதாவது சாக்குச் சொல்லி தப்பிச்சு வந்தாத்தான் உண்டு. ஏன்னா வேலையில நிம்மதியே கிடையாது. மக்கள் சாதாரண டிராஃபிக் ரூல்ஸைக் கூட மதிக்க மாட்றாங்க.

> சட்டத்தைத் தெரிந்தே மீறுபவர்கள் இரண்டே ரகத்தினர்கள்தான். ஒன்று காவல்துறை மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மற்றொன்று அதிகாரம் மற்றும் பணம் வைத்திருப்பவர்கள். இந்த இரண்டு மக்களையும் சட்டத்தால் எதுவும் செய்ய முடிவதில்லை. காவல்துறையினர் எல்லோரும் சட்டத்தை மதிக்கத் தொடங்கினால், மக்கள் அதைவிட நூறு மடங்கு மதிப்பார்கள்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஈவ்டீசிங், தீவிரவாதம் எல்லாமே நாளுக்குநாள் பெருகிக்கிட்டே போகுது...” என்று கவலைப்பட்டார்.

“அவசரத்தில், ஆவேசத்தில், அத்தியாவசியமாக தவறு செய்பவர்கள் மிகச் சிலர்தான். ஆனால் தவறு என்று தெரிந்தும், தைரியமாகச் செய்பவர்கள்தான் உண்மையான குற்றவாளிகள். இவர்களை உருவாக்குவதில் காவல்துறைக்குத்தான் அதிக பங்கு என்பதால், விளைவுகளையும் நீங்கள்தான் அனுபவிக்க வேண்டும்”

“புரியலையே சாமி...”

“தீவிரவாதிகளை கண்காணிக்கச் செல்லும் போலீஸ், கிராமப்புறப் பெண்களின் சேலைகளை உருவி பலாத்காரம் புரிகிறது. கள்ளச்சாராயம், விபச்சாரம், கஞ்சா விற்பனைக்கு ரகசிய ஆதரவு கொடுத்து வளர்ப்பதும் காவல்துறைதான். சாலையோரம் கடை வைத்து உழைத்துப் பிழைப்பவர்களிடம் மாமூல் வாங்குவதில் தொடங்கி, கட்டப் பஞ்சாயத்து செய்வது வரை போலீஸ்காரர்கள் செய்யும் தவறுகளைவிட பொதுஜனங்கள் குறைவாகவே செய்கிறார்கள்”

“இதெல்லாம் இல்லைன்னு சொல்லலை சாமி... யாரோ எங்கோ செய்யும் தவறுக்கு ஒட்டுமொத்த போலீஸையும் குறை சொல்லலாமா?”

“எந்தக் குற்றமும் செய்யாதவன் மட்டுமே அடுத்தவன் மீது கல் எறியவேண்டும் என்பதைத்தானே உங்கள் மதம் போதனை செய்கிறது. சட்டத்தைத் தெரிந்தே மீறுபவர்கள் இரண்டே ரகத்தினர்கள்தான். ஒன்று காவல்துறை மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மற்றொன்று அதிகாரம் மற்றும் பணம் வைத்திருப்பவர்கள். இந்த இரண்டு மக்களையும் சட்டத்தால் எதுவும் செய்ய முடிவதில்லை. காவல்துறையினர் எல்லோரும் சட்டத்தை மதிக்கத் தொடங்கினால், மக்கள் அதைவிட நூறு மடங்கு மதிப்பார்கள்”

## மந்திரச்சொல்

**யாரும் கவனிக்காத நேரங்களில் பிள்ளைகள் அழுவதில்லை.**

“அப்படின்னா போலீஸ்தான் எல்லாத் தப்புக்கும் காரணமா?”

“இல்லை, காவல்துறை என்ற அமைப்பு தவறு. உடுப்பை அணிந்ததும் ஒவ்வொரு காவலரும் குறுநில மன்னர் போன்று தன்னை நினைத்துக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கி விடுகிறார்கள். எங்கெல்லாம் செல்லுபடியாகிறதோ, அங்கெல்லாம் சர்வாதிகாரம் புரிகிறார்கள். இதெல்லாம் போதாதென்று குற்றவாளிகளை உருவாக்குவதற்குத்தான் நீங்களே தனியாக ஒரு தொழிற்சாலையும் நடத்துகிறீர்களே”

“காவலர்கள் நடத்துகிறார்களா?”

“ஆம்... சிறைச்சாலையைத்தான் சொல்கிறேன். மிகச் சாதாரண தவறு செய்து பயந்தபடி சிறைக்குச் செல்லும் ஒருவன், அங்கே கோடிக்கணக்கில் கொள்ளை அடித்தவனுக்குக் கிடைக்கும் மரியாதையைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறான். பணம் கொடுத்தால் சிறைச்சாலையின் ஒவ்வொரு கதவையும் காவலர்கள் திறந்து விடுவார்கள் என்பதை அறிந்ததும் பெரிய அளவில் திருடினால் தப்பு இல்லை என முடிவு எடுக்கிறான். பஞ்சமா பாதகங்கள் செய்வதற்கும் சிறைச்சாலையில் பயிற்சியும் கிடைத்துவிடுகிறது. இப்படிப் பட்டவர்களை உற்பத்தி செய்துவிட்டு நாட்டில் தவறுகள் பெருகிவிட்டது என்று புலம்புவது நியாயமா? முதலில் காவல்துறையை சுத்தம் செய்யுங்கள், பின்னர் மக்களுக்கும் விழிப்பு வரும்”

“எங்க துறையிலும் நல்லவங்களும் கொஞ்சபேர் இருக்காங்க சாமி..”

“ஜெயிலிலும் சில நல்லவர்கள் இருப்பது போன்றுதானே...” என்று சிகரெட்டை அணைத்ததைப் பார்த்ததும் அந்த பேச்சை முடித்துக்கொண்டார் எபநேசர்.

‘‘சாமி.. என்னோட மனைவி அருணா உங்ககிட்ட பேசணுமாம்...” என்றார்.

“யாருடைய நலனுக்காக நீ கேட்கப் போகிறாய்?” என்று ஒரு இயல்பான குடும்பத் தலைவி போல இருந்த அருணாவிடம் கேட்டார்.

“ஏன் சாமி..?” என்றபடி விழித்தாள்.

“நாத்திகர்களாக இருக்கும் சிலர் கோவிலுக்குப் போகாமல், ஊருக்கெல்லாம் உபதேசம் செய்வார்கள். அதேநேரம் சுதந்திரம் தருகிறேன் என்ற போர்வையில் மனைவியை மட்டும் மறக்காமல் கோவிலுக்கு அனுப்பி, அத்தனை பூஜைகளையும் சரிவர செய்ய அனுமதி கொடுப்பார்கள். அதற்கு உண்மையான காரணம் ஒரு வேளை கடவுள் இருந்துவிட்டால், அவளது தாலியை காப்பாற்றட்டும் என்று நப்பாசைதான்.


பெண்களும் அப்படித்தான், அவர்களுக்குத் தேவையானதை நேரடியாகக் கேட்க மாட்டார்கள். தன்னைச் சுற்றியிருப்பவர்கள் நன்றாக இருந்தால், தானும் நலமாக இருக்கலாம் என நினைத்து, எப்போதும் பிறருக்காகவே கவலைப்படுவார்கள். இப்போது உன்னுடைய கவலைக்கு யார் காரணம்?”

“என்னோட மகள் நாலைஞ்சு வருஷம் கழிச்சு இப்பத்தான் முழுகாமயிருக்கா. இப்போ அவளுக்கு அஞ்சு மாசம். அதான் குற்றாலத்துக்கு அழைச்சுட்டு வரலே. சென்னையில பெரிய டாக்டரிடம்தான் காட்டுறோம். ஆனாலும் பிரசவத்தை நினைச்சு ரொம்பவும் பயப்படுறா, அவளை எப்படி சமாளிக்கப் போறோம்னு தெரியலை...” என்றாள்.

“அதுசரி, இந்த உலகத்தில் எந்தப் பெண்ணுமே இதுவரை குழந்தையே பெற்றதில்லை. அப்படியொரு சாதனையை உன் மகள்தானே முதன்முதலில் செய்யப் போகிறாள். அதனால் பயம் வரத்தானே செய்யும்?” என்று புன்னகைத்தார் ஞானகுரு. அவருடன் சேர்ந்து அனைவரும் சிரிக்க, அருணா மட்டும் பொசுக்கென கண்ணீர் வடித்தாள்.

**- வருவார் ஞானகுரு**







www.gyanaguru.com

# ஞானகுரு பதில்கள்


**? மனிதர்கள் நாளுக்கு நாள் குண்டாகி வருகிறார்களே..?**

**- டி.யசோதா, திருவல்லிக்கேணி.**

**ஞானகுரு :**

உடல் பருமானவது மட்டுமில்லை, நல்ல உயரமாக வளர்கிறார்கள். நீண்ட ஆயுளுடன் வாழ்கிறார்கள் என்றாலும் வாழ்நாள் நோயாளியாக இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், நிறைய நிறைய சாப்பிடுவது தான். காட்டில் வாழும் விலங்குகள், பறவைகள் எதுவுமே உடல் பருமன் அடைவதில்லை. ஏனென்றால், அவை பசிக்கு மட்டுமே சாப்பிடுகின்றன. மானை வேட்டையாடும் புலி போதிய அளவுக்குத் தின்றுவிட்டு, மிஞ்சுவதை வேறு காட்டு விலங்குகளுக்கு விட்டுச் செல்கிறது.

ஆனால், மனிதன் நாள் முழுக்க சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறான். மூன்று நேரம் சாப்பிடுகிறான். இடைப்பட்ட நேரங்களில் தின்பண்டங்கள் சாப்பிடுகிறான். தொலைக்காட்சி பார்க்கும்போது சாப்பிடுகிறான். உடற்பயிற்சி முடித்ததும் வயிற்றுக்குள் அள்ளிக் கொட்டுகிறான். ஒவ்வொரு ஹோட்டலுக்கும் போய் விதவிதமாக சாப்பிடுகிறார்கள். இந்த ருசியில் சிக்கிய அத்தனை பேரும் நோயில் சிக்குகிறார்கள். எத்தனை பணம் கொட்டிக் கொடுத்தாலும் ஆரோக்கியத்தை திரும்பவும் கொண்டுவர இயலாது. தங்கள் நோய், துன்பங்களுக்கு முக்கிய காரணம், தங்களுடைய அளவுக்கதிமான சாப்பாடு என்பது தெரியாமலே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த கதை முடியப்போவதில்லை.






**? சேவை மனப்பான்மை இன்று குறைந்துவிட்டதா..?**

**- பி.நடராஜன், சென்னை.**

**ஞானகுரு :**

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், வங்கிப் பணியாளர்கள், தபால் ஊழியர்கள் என மக்களுடன் நேரடித் தொடர்புள்ளவர்கள் அதுவும் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்பவர்கள் ரொம்பவே சலித்துக்கொண்டு பணியாற்றுவதால் சேவை மனப்பான்மை குறைந்துபோனதாகத் தெரிகிறது. ஆனால், உண்மை அதுவல்ல. பேரிடராக பெருவெள்ளம், நிலநடுக்கம் போன்றவை ஏற்படும் தருணங்களில் எல்லா மனிதர்களும் சேவையாளராக மாறிவிடுகிறார்கள். போலீஸ் பிடிக்கிறாங்க என்று சொல்லிக்கொண்டே போகும் வாகனவோட்டிகளும், முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் பிச்சை போடும் மனிதர்களும் சேவையாளர்களே.

**? பசியும் பணமும் இல்லையென்றால் இந்த உலகம் எப்படியிருக்கும்..?**

**- ஏ.மணிகண்டன், பாண்டியன் நகர்.**

**ஞானகுரு :**

பசி இல்லையென்றால் மரம் போன்று மனிதர்கள் வளர்ந்துகொண்டிருப்பார்கள். பணம் இல்லையென்றால் விலங்குகள் போன்று உணவைத் தவிர வேறு எதையும் மனிதர்கள் தேட மாட்டார்கள். எப்போதும் போல், உலகம் இவற்றை எல்லாம் சட்டையே செய்யாமல் சுற்றிக்கொண்டே இருக்கும்.







**? மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைதானே மனிதனை இயக்குகிறது..?**

**- என்.பாண்டியராஜன், சிவகாசி.**

**ஞானகுரு :**

உயிர் வாழ்தலும், புதிய உயிர்களை உருவாக்குதலும் அனைத்து உயிர்களுக்குமான அடிப்படை இலக்கணம். இதற்கான போராட்டங்களை ஆசை என்று வரையறுக்க முடியாது. அடிப்படைத் தேவைகள் நிரம்பிய மனிதர்களே அடுத்தகட்டத்துக்கு அதாவது மண், பெண், பொன் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால், குழந்தைகளுக்கும் தெளிவடைந்த முதியோர்களுக்கும் மண்ணும் பொன்னும் ஒரு பொருட்டே இல்லை. இடைப்பட்ட காலத்தில்தான் தேவையற்ற பொருட்களுக்கு ஆசைப்பட்டு அலைந்து அல்லல்படுகிறான்.




**? உடல் வலிமை, மனவலிமை இவற்றில் எது ஆற்றல் மிகுந்தது..?**

**- டி.ராஜலட்சுமி, என்.ஜி.ஓ. காலனி.**

**ஞானகுரு :**

ஓடுவதற்கான கால்களின் அமைப்பு பெற்றவன் மற்றவர்களைவிட சிறப்பாக ஓட முடியும் என்பது உண்மை. ஆனால், அவனுடைய வெற்றியைத் தீர்மானிப்பது மன வலிமை மட்டுமே. உடல் வலிமை ஒவ்வொரு காலத்திற்கும் மாறிக்கொண்டே இருக்கும். எத்தனை முயற்சி செய்தாலும் 70 வயது முதியவரால் 20 வயது இளைஞருடன் போட்டியிட்டு ஓடி ஜெயிக்க இயலாது. ஆனால், மன வலிமையை என்றென்றும் குறையாமல் பாதுகாக்க முடியும். உடல் நோய் தன்னைத்தானே ஓரளவு குணப்படுத்திக்கொள்ளும். ஆனால், மன நோய் தனக்குத்தானே சரியாவதில்லை.





**? ஆண்டுக்கு 365 நாட்கள் என்று எதன் அடிப்படையில் முன்னோர்கள் தேர்ந்தெடுத்தார்கள்..?**

**- பி.ஷாஜகான், திருத்தங்கல்.**

**ஞானகுரு :**

நம் தமிழ் முன்னோர்கள் 365 நாட்கள் கொண்ட வருடத்தை உருவாக்கியதாக எந்த சான்றுகளும் இல்லை. நிலவின் வளர்பிறை, தேய்பிறை ஆகியவற்றைக் கொண்டே மாதங்களை உருவாக்கினார்கள். பருவநிலை மாற்றங்களைக் கொண்டே மாதங்களை வகுத்தார்கள். பண்டைய நாட்களில் காலத்தைப் பெரும்பொழுது சிறுபொழுது என வகுத்தனர். இளவேனில் (சித்திரை, வைகாசி ) முதுவேனில் (ஆனி, ஆடி), கார் (ஆவணி, புரட்டாதி) கூதிர் (ஐப்பசி, கார்த்திகை) முன்பனி ( மார்கழி, தை, ) பின்பனி ( மாசி, பங்குனி) ஆறு பெரும் பொழுதாகும். வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை. யாமம் என்பதே ஒரு நாளில் அடங்கிய ஆறு சிறுபொழுதாகும். மேலும் ஒரு நாள் 60 நாளிகை கொண்டது. ஒரு நாளிகை 24 நிமிடங்களாகும். இத்தனை நுணுக்கமாக கணக்கிட்டவர்கள் நீண்ட தொடரான ஆண்டுகளை நிர்ணயிக்கவில்லை. அதனாலே அன்றைய அரசர்கள், புலவர்கள், சான்றோர்களின் பிறப்பு, இறப்பு காலக்கணிதம் தெளிவாகத் தெரியவில்லை.

**? கூகுளில் எல்லாவற்றுக்கும் விடை கிடைக்கும் என்று நம்பும் இளைஞர்கள் பற்றிய கருத்து என்ன..?**

**- எம்.முகுந்தன் அல்லம்பட்டி.**

**ஞானகுரு :**

ஒரு காலத்தில் புகைப்படம் எடுப்பதற்கும், சினிமா எடுப்பதற்கும் சூரிய ஒளி மிகவும் முக்கியம். எனவே சூரியன் இல்லாத நேரத்தில் சினிமா சூட்டிங் நடக்காது. அதன்பிறகு தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இருட்டிலும், தண்ணீருக்குள்ளும், ஓடும் காரிலும் படம் எடுக்கும் அளவுக்கு கேமரா வந்துவிட்டன. அனைத்து வசதிகளுடனும் கேமரா வந்துவிட்டது என்பதால் இனி கேமராமேன்களுக்கு மதிப்பு குறைந்துவிடுமா என்று பிரபல கேமராமேன் ஒருவரிடம் கேட்டபோது, ‘எத்தனை சிறப்பான கேமரா வந்தாலும், அதனை ரசனையுடன் இயக்குவதற்கு மனிதர்களே தேவை’ என்று சொன்னார். அப்படித்தான் கூகுளில் நிறைய விடைகள் கிடைக்கலாம். ஆனால், அவற்றில் சரியான விடையைக் கண்டுபிடிப்பதுதான் அறிவு.



?அறநிலையத்துறையின் பணி என்ன..?

- ஏ.மணிகண்டன், அல்லம்பட்டி

**ஞானகுரு :**


தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 36,861 கோயில்கள் உள்ளன. கோயிலில் சிற்பங்கள், சித்திரங்கள், நகைகள், சொத்துக்கள் போன்ற வற்றுடன் வருமானத்தை பாதுகாக்கிறது அறநிலை யத்துறை. பணியாளர் சம்பளம், சொத்து வரி, குடிநீர் வரி, பூஜை, வழிபாட்டு வழிகள், மராமத்து பணிகள், பொது சுகாதாரம், மின் சாதனங்கள், சிசிடிவி, ஜெனரேட்டர் செலவு, அன்னதானம் உள்ளிட்ட செலவுகளை முறைப்படுத்துகிறது. அறநிலையத்துறை செயல்பாடுகளில் முறைகேடுகள் நடப்பதுண்டு. அவற்றை கண்டறிந்து களைய வேண்டுமே தவிர, கோயிலை தனியார் கைகளில் ஒப்படைக்கும் அபத்தத்தை சிந்திக்கவே கூடாது. ஏனென்றால், பக்திமான் வேடமிடும் மனிதர்கள் கூட்டு சேர்ந்து கொள்ளை அடிப்பதற்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை.

?மனைவி சொல்லை மந்திரமாக கடைபிடிக்க நினைக்கிறேன், சரியாக இருக்குமா..?

- பி.சிவசுப்பிரமணியன், காந்திநகர்.

**ஞானகுரு :**

தாய், தந்தை, ஆசிரியர், மனைவி என யார் என்ன சொன்னாலும் அதனை மந்திரமாக பெற்றுக்கொள்வதில் தவறு இல்லை. ஆனால், அவற்றை தெளிவாக ஆய்வு செய்து, சரியானதை மட்டுமே கடைபிடிக்க வேண்டும். அதுவே, மனிதருக்கு அழகு. யாராவது ஒருவர் சொல்வதை முழுமையாக அப்படியே ஏற்றுக்கொள்பவரை அடிமை என்றுதான் சொல்ல வேண்டும்.



?சாகுற நேரத்தில் சங்கரா சங்கரா என்கிறார்களே, அது என்ன..?

- டி.வாசுகி தங்கராஜ், வள்ளிக்குளம்.

**ஞானகுரு :**

அது ஒரு நல்ல கதை. ஒரு பணக்காரர் மரணத்துக்குப் பிறகு சொர்க்கம் செல்வதற்கான வழியை ஒரு குருவிடம் கேட்டார். மரணம் வரும்போது, நீ சொல்லும் கடைசி வார்த்தை சங்கரா என்பதாக இருந்தால், நீ சொர்க்கத்துக்குப் போய்விடலாம் என்று சொன்னார். சொர்க்கத்துக்குப் போவது இத்தனை எளிதா என்று நினைத்த பணக்காரர் அதை மனதில் நன்றாக பதிய வைத்துக்கொண்டார். கடைசி காலத்தில் அவருக்கு நோய் வந்தது, நிறைய அவஸ்தைப்பட்டார். ஆனாலும், அவர் ஒருபோதும் சங்கரா என்று சொல்லவே இல்லை. ஏனென்றால், இன்னமும் மரணம் நெருங்கவில்லை என்றே நினைத்தார். ஒரு கட்டத்தில் சங்கரா என்று சொல்லாமலே செத்தும் போனார்.

என் அப்பாவால் ஏன் சங்கரா என்று சொல்லமுடியாமல் போயிற்று என்று அந்த குருவிடம் கேட்டான் அவரது மகன். ‘சாகும்போது மட்டும் சங்கரா சங்கரா என்று சொல்வது யாராலும் முடியாது. உயிருடன் இருக்கும்போதே அவ்வப்போது சொல்லிக்கொண்டே இருந்து பழகுதல் வேண்டும்…’ என்று சொன்னாராம். இதுதான் தத்துவம். எந்த ஒன்றுக்கு ஆசைப்பட்டாலும், அதனை வாழ்நாள் முழுக்க கடைபிடித்தால் மட்டுமே சாத்தியமாகும்.

?லட்சியப் பாதைகளில் முன்னேறு பவர்கள் தடைகளை எவ்வாறு முறியடிக்கின்றனர்..?

- எம்.பழனிகுமார் கள்ளிக்குடி.

**ஞானகுரு :**

லட்சியப் பாதைகளில் செல்பவர்கள் தங்களுக்கு முன்னே தென்படும் தடைகளை படிக்கட்டுகளாக மட்டுமே பார்ப்பார்கள். அப்படிப்பட்ட பாசிடிவ் சிந்தனை உள்ளவர்களாலே லட்சியங்களை நோக்கி பயணிக்க முடியும்.









# கவித்துவம்

சன்னதியோ..
சமாதியோ..
எதுவுமே இறுதி
ஊர்வலம்தான்
பூக்களுக்கு….!!!

- எம். பாஸ்கர்

சினிமா எனும் வாழ்க்கை

# LEO லியோ

# 74 வயசு லியோவின் ஜாலியோ ஜிம்கானா



குழந்தைகள் என்றாலே அவர்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை, அவர்கள் உலகமே ரொம்பவும் ஜாலி என்றே பெரியவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல... குழந்தைகளுக்கும் நிறைய நிறைய மன அழுத்தமும் பிரச்னைகளும் இருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக சொல்கிறது லியோ.

சின்னப் பிள்ளைகள், அவர்களைவிட சின்னப் பிள்ளைகள் எல்லோரும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதாக நினைக்கிறார்களே தவிர, தங்களாலும் சந்தோஷமாக இருக்க முடியும் என்று நினைப்பதில்லை. அதனாலே குழந்தைகள் அடம் பிடிப்பவராக, சண்டை போடுபவராக, சுயநலம் மிக்கவராக வளர்கிறார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படும் பயம், குழப்பத்தில் இருந்து வெளிவருவதற்கு பெரியவர்களே சரியான வழி காட்ட வேண்டும். ஆனால் அவர்களோ, குழந்தைகளை பள்ளியில் சேர்த்ததுடன் தங்கள் பொறுப்பு முடிந்து விட்டதாக நினைக்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் குழப்பங்களுக்குத் தீர்வையே இந்த படத்தில் லியோ ஜாலியாக சொல்லித்தருகிறது.

குழந்தைகளுக்கான அனிமேசன் திரைப்படம் என்பதால் இசையும் பாடலுமாக அட்டகாசமாகத் தொடங்குகிறது லியோ. குட்டியூண்டு வாண்டுகளும் ஜூனியர் மாணவர்களும் பள்ளிக்கு வருகிறார்கள்.

ஆரம்பப் பள்ளி மாணவர்களை மகிழ்விப்பதற்காக, அந்த வகுப்பில் லியோ எனப்படும் ட்வாட்ரா ஓணானும், ஸ்குர்டில் எனப்படும் ஆமையும் கண்ணாடிக் கூண்டில் வளர்க்கப்படுகின்றன. நீண்டகாலமாக அந்த கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்தபடி ஆசிரியர்கள் பாடம் நடத்துவதைக் கேட்டும், பிள்ளைகளின் நடவடிக்கைகளைப் பார்த்தும் பழகிவிட்டதால், அடுத்து ஆசிரியர் என்ன பேசுவார், மாணவர்கள் என்ன செய்வார்கள் என்பதையெல்லாம் அச்சுப்பிசகாமல் சொல்கின்றன. ஒரு வகையில்

# LEO

> நீ பேசுவதைக் குறைத்துக்கொள், பிறர் பேசுவதைக் கேள். அவர்களிடம் நீ கேள்வி கேட்கத் தொடங்கினால் உன் மீது அன்பு செலுத்துவார்கள் என்று லியோ சொல்லித் தருகிறது. அதை வகுப்பில் ஃபாலோ செய்யும் சம்மருக்கு நிறைய தோழர்கள் கிடைக்கிறார்கள்.



சலிப்பான வாழ்க்கையை இரண்டு உயிரினங்களும் வாழ்கின்றன.

ட்வாட்ராக்கள் 75 வயதில் செத்துவிடும் என்று பெற்றோர்கள் பேசுவதைக் கேட்டு லியோ அதிர்ச்சி அடைகிறது. ஏனென்றால் அதற்கு இப்போது 74 வயது. இன்னும் ஒரு வருடத்தில் சாகப்போகும் நிலையில், இதுவரை தான் எதையுமே சாதிக்கவில்லை என்று உணர்கிறது. மரணம் அடைவதற்குள் ஏதாவது உருப்படியாக செய்யவில்லை என்றால், தன்னுடைய இறுதி யாத்திரைக்கு யாருமே வர மாட்டார்கள் என்று வருத்தமடைகிறது.

அதனால், எப்படியாவது கண்ணாடிப் பெட்டியிலிருந்து தப்பித்துச் சென்று, இயற்கை சொர்க்கமான எவர்க்ளாட்ஸ் எனும் இடத்தை சுற்றிப் பார்க்க லியோ ஆசைப்படுகிறது. ஆனால், இதெல்லாம் வெட்டி பேராசை, வயிறு நிறைய சாப்பாடு கிடைக்கிறது, தின்றுவிட்டு அமைதியாக இங்கேயே கிட என்கிறது ஆமை.

இந்த நேரத்தில் அந்த வகுப்புக்கு மால்கின் எனப்படும் கண்டிப்பான ஆசிரியை வருகிறார். எல்லாமே எழுதி வைத்தபடி சரியாக நடக்கவேண்டும் என்று நினைப்பவர். பிள்ளைகளுக்கு பொறுப்பு வரவேண்டும் என்பதற்காக யாராவது ஒருவர் லியோவை வார விடுமுறையில் வீட்டுக்கு கொண்டுசென்று, பத்திரமாக பாதுகாத்து திருப்பிக் கொண்டுவர வேண்டும் என்று சொல்கிறாள்.

## மந்திரச்சொல்

**நிராகரிப்புகளே புதிய திறமைகளைக் கொண்டுவருகின்றன.**

அதன்படி, சம்மர் என்ற சிறுமியின் வீட்டுக்குப் போகிறது லியோ. அங்கிருந்து தப்பித்துச்செல்ல முயலும்போது மாட்டிக்கொள்ளும் லியோ, தன்னால் பேச முடியும் என்று சம்மரிடம் உண்மையை சொல்லிவிடுகிறது. அதைக் கேட்டு சம்மர் ஆச்சர்யமாகிறாள்.

உன்னிடம் மட்டுமே பேசுவேன். இதை யாரிடமும் சொல்லிவிடாதே என்று லியோ கூறுகிறது. சம்மர் ரொம்பவும் வாயாடி. அவளுக்குப் பேசிக்கொண்டே இருப்பது பிடிக்கும். அதேநேரம், யாருக்குமே என்னை பிடிக்கவில்லை என்று சம்மர் லியோவிடம் தன்னுடைய வருத்தத்தை தெரிவிக்கிறாள்.

நீ பேசுவதைக் குறைத்துக்கொள், பிறர் பேசுவதைக் கேள். அவர்களிடம் நீ கேள்வி கேட்கத் தொடங்கினால் உன் மீது அன்பு செலுத்துவார்கள் என்று லியோ சொல்லித் தருகிறது. அதை வகுப்பில் ஃபாலோ செய்யும் சம்மருக்கு நிறைய தோழர்கள் கிடைக்கிறார்கள்.

இதேபோல் ஒவ்வொரு மாணவரும், மாணவியரும் லியோவை தங்கள் வீட்டுக்கு கூட்டிச் செல்கிறார்கள். எல்லோரிடமும் தான் பேசுவேன் என்று சொல்வதுடன், அவர்களுடைய ஆழ்மனதில் உள்ள பிரச்னை தீர்வதற்கு வழி காட்டுகிறது. அதேநேரம், நான் உன்னிடம் மட்டுமே பேசுகிறேன், யாரிடமும் சொல்லிவிடாதே என்று சொல்வதை எல்லா பிள்ளைகளும் அப்படியே நம்புகிறார்கள்.

அத்தனை பிள்ளைகளுக்கும் லியோ செல்லப்பிள்ளையாக மாறிவிடுகிறது. எல்லா ஆலோசனைகளையும் பிள்ளைகள் தனித்தனியே லியோவை சந்தித்துக் கேட்கிறார்கள். தன்னை மாணவர்கள் மதிப்பதே இல்லை என்று கடுப்பாகும் ஆமை, லியோவை பற்றிய உண்மையை மாணவர்களிடம் சொல்லிவிடுகிறது. அதாவது உன்னிடம் மட்டுமே ஸ்பெஷலாகப் பேசுகிறேன் என்று லியோ சொல்வது உண்மை இல்லை, எல்லோரிடமும் பேசுகிறது என்று உண்மையைச் சொல்கிறது. லியோ பொய் சொன்னதற்கு அத்தனை பிள்ளைகளும் கோபமாகிறார்கள்.

லியோவால் பேச முடியும் என்பதை அறிந்துகொள்ளும் ஆசிரியை மால்கமும், அதனை தன்னுடைய வீட்டுக்கு கூட்டிச் செல்கிறாள். ஒரு நல்ல ஆசிரியையாக வேண்டும் என்ற கனவு நிறைவேறவில்லை என்ற வருத்தத்தில் அவள் இருப்பதை அறிந்து, அதற்கும் வழி சொல்லித் தருகிறது லியோ.

இந்த நேரத்தில் மாணவர்களுக்கு மாறுவேடப் போட்டி நடக்கிறது. ஆசிரியை மால்கமுக்கு லியோ கொடுத்த ஆலோசனை படி, மாணவர்கள் வரலாற்று தலைவர்கள் போன்று வேடமணிந்து பேசி வெற்றி பெறுகிறார்கள். மாணவர்கள் முதன்முறையாக அந்த போட்டியில் வெற்றி பெற்றதற்கு ஆசிரியை மால்கமே காரணம் என்று அந்த பள்ளி நிர்வாகம் பாராட்டுகிறது.

உண்மையான காரணம் லியோ என்பது தெரியவந்தால் தனக்கு நிர்வாகத்தினரிடம் மதிப்பு குறைந்துவிடும் என்று நினைக்கும் ஆசிரியை, லியோவை கொண்டுபோய் எவர்க்ளாட்ஸ் இடத்தில் யாருக்கும் தெரியாமல் விட்டுவிடுகிறாள்.

அதன்பிறகு எப்படி மாணவர்கள் மனம் திருந்தி லியோவை ஏற்றுக்கொண்டார்கள், லியோ அந்த காட்டில் இருந்து தப்பியது எப்படி என்பதையெல்லாம் படத்தில் குழந்தை, குட்டிகளுடன் கண்டு மகிழுங்கள்.

அதேநேரம், பறவைகள், விலங்குகள் எல்லாமே காட்டில் இருக்கவேண்டுமே தவிர, வீட்டில் அடைத்துவைத்து வளர்க்கக்கூடாது என்றும் குழந்தைகளுக்கு சொல்லித்தருகிறது லியோ. அதோடு பிறருடன் நிறைய நிறைய பேசுவதன் மூலம், நிறைய நண்பர்களுடன் பழகுவதன் மூலம், பிறரை புரிந்துகொள்ள முயற்சிப்பதன் மூலம் குழந்தைகளால் தங்கள் சிக்கல்களிலிருந்து வெளியே வர முடியும் என்று லியோ வழி காட்டுகிறது

முட்டையிலிருந்து குழந்தைகள் வெளியே வருகிறார்கள் என்று ஆமை விளையாட்டுத்தனமாக சொல்வதை குழந்தைகள் அப்படியே நம்புவதாகக் காட்டியிருக்கிறார்கள். இந்த படம் பார்க்கும் குழந்தைகளுக்கு அப்படியொரு நம்பிக்கையும் தப்பான கற்பிதம் உருவாவதை தடுக்க இயலாது என்பது இந்த படத்தின் குறையாகச் சொல்லலாம்.

குழந்தைகள் மனதுக்குள் இருக்கும் பிரச்னைகளை அறிந்து, அதிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களை குழந்தைகளாகவே இருக்க அனுமதிப்பதுதான் பெற்றோர்களின் கடமை என்கிறது லியோ.

அப்படியே செய்யுங்கள் பெற்றோர்களே...


www.gyanaguru.com

# மனைவிக்கு எத்தனை நேரம்?

மரத்தடியில் சாய்ந்து அமர்ந்தபடி ஏதோ ஒரு பாடலை உரத்தகுரலில் பாடிக்கொண்டிருந்த ஞானகுரு, தேடி வந்த தம்பதியரை தன்னருகில் அமரச் செய்தார்.

பேசத் தொடங்கிய கணவர், ‘‘பிறருக்கு உதவி செய்வதற்கு எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது. நண்பர்களும், உறவினர்களும் கேட்கும் உதவிகளை மகிழ்ச்சியுடன் செய்துதருகிறேன். இதனால் வீட்டுக்கு வரத் தாமதமாகிறது. வீட்டுக்குத் தேவையான நேரம் ஒதுக்குவதில்லை என்று என் மனைவி தொடர்ந்து குற்றச்சாட்டு வைக்கிறாள். இதனால் எங்களுக்குள் சண்டை வருகிறது… பிறருக்கு உதவி செய்வது நல்லதுதானே.. இவளுக்கு நீங்கள்தான் புரியவைக்க வேண்டும்…” என்றார்.

அடுத்து பேசிய மனைவி, “வீட்டையும் கவனியுங்கள்… எங்களுக்கும் நேரம் ஒதுக்குங்கள் என்றுதான் கேட்கிறேன், வீட்டுக்கு வெளியே அவருக்குக் கிடைக்கும் அன்பையும் அங்கீகாரத்தையும் மட்டுமே பெரிதாக நினைக்கிறார், அந்த பாராட்டுகளையே விரும்புகிறார்…” என்றார்.

“ஒரு மரத்திற்கு இலை, கிளை, வேர் இருக்கிறது. இவற்றில் எது உறுதியாக இருக்க வேண்டும்..?” என்று கணவரை பார்த்து கேட்டார்.

“இதிலென்ன சந்தேகம்… நிச்சயமாக வேர் மட்டுமே உறுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் எத்தனை கிளைகளையும், இலைகளையும் உருவாக்கிக்கொள்ள முடியும்…” என்றார்.

‘‘சரியாகச் சொன்னீர்கள். மரத்தில் மட்டுமின்றி மனிதர்களுக்கும் வேர், இலை, கிளை உண்டு…” என்றார் ஞானகுரு. அதன் அர்த்தம் புரியாமல் அவர்கள் விழிக்கவே, விவரிக்கத் தொடங்கினார்.

“மனிதர்களின் இலை என்பது உறவினர்கள். இவர்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் வருவதும் செல்வதுமாக இருப்பார்கள். இலையைப் போன்று குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே உங்களிடம் இருப்பார்கள். உங்களிடமிருந்து தேவயானதை பெற்றுக்கொள்ளும் வரையிலும் ஒட்டியிருப்பார்கள். அதன்பிறகு உங்களிட மிருந்து விலகிவிடுவார்கள். பலமான காற்று அடிக்கும்போது இலைகள் விழுந்துவிடுவது போல், சிக்கலான காலங்களில் உறவுகள் விலகிச்செல்லவே அதிக வாய்ப்பு உள்ளது. ஆகவே, இவர்கள் ஒரு பருவத்திற்காக உங்கள் வாழ்க்கையில் வந்தவர்கள் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தது கிளை மனிதர்கள். இது நண்பர் களைக் குறிக்கும். கிளை என்பது மரத்திற்கு மிகவும் முக்கியம் என்றாலும், அதுவே மரம் அல்ல. கிளை பலமானது, வலிமையானது, மரத்தின் தன்மையைப் பிரதிபலிக்கக்கூடியது. ஆனால் இதுவும் உடையக்கூடியது என்பதை மனதில்கொள்ள வேண்டும். அவ்வப்போது பல்வேறு காரணங்களால் இந்த கிளைகள் வெட்டப்படும். எனவே, மரத்தைவிட்டு சென்றுவிடும் இந்த கிளை மக்களும் நிரந்தரமில்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தது வேர். மனிதன் எனும் மரத்திற்கு வேராக இருப்பது அவரது குடும்பம். வெளியே தெரியாமல் மரம் வளர்வதற்கான அத்தனை சிரமங்களையும் குடும்பத்தினரே எடுத்துக்கொள் கிறார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை என்றாலும், சூரிய ஒளி போதவில்லை என்றாலும் ஆங்காங்கே வேர்களை அனுப்பி மரத்திற்காகவே வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் வந்து செல்லும் நபர்கள் அல்ல, எல்லா காலங்களிலும் எல்லா துன்பங்களிலும் இணைந்தே நிற்பவர்கள். எனவே, வேர்களுக்காக மட்டுமே மனிதன் தன்னுடைய அதிக நேரத்தை செலவிட வேண்டும். இங்குதான் அதிக அன்பு செலுத்த வேண்டும். வேருக்குப் போக மீதமிருக்கும் நேரத்தையே கிளைகளுக்கும் இலைகளுக்கும் கொடுக்க வேண்டும். நீங்கள் இப்போது தலை கீழாக செயல்படுவதை மாற்றிக்கொள்ளுங்கள். இலைகளும் கிளைகளும் போனாலும் மரத்திற்கு எதுவும் ஆவதில்லை, மீண்டும் துளிர்த்துவிடும். வேர்களுக்கு சிக்கல் வந்துவிட்டால் மரமும் பட்டுப் போகும்…” என்று முடித்தார் ஞானகுரு.

மனைவியின் கையை இறுகப் பற்றிக்கொண்டார் கணவர். இனி, அந்த வேருக்கு போதிய ஆதரவு கிடைத்துவிடும்.

www.gyanaguru.com





www.gyanaguru.com

# நம் வாசகர்களின் கவிப்பூக்கள்



வலிகளை கொடுக்க
ஆயிரம் பேர் இருந்தாலும்..,
ஆறுதலை கொடுக்க
ஒருவர் இருந்தால்
எல்லாமே இலகுவாக
மாறிவிடும்..!!!

- மீ. இப்ரா யூசுப்.

இனி நிம்மதியாய்
தொடர்வேன்
என் பயணத்தை,
நெரிசல் மிகுந்த
சாலையைக் கடந்துவிட்டது...
நாய்க்குட்டி!

- மு.முபாரக்

குழந்தை முன்
அசையும் கிலுகிலுப்பையாய்
எப்போதாவது எட்டிப் பார்க்கிறது
ஒரு துளி இனிமை
எதிர்ப்படும் எதையும்
எப்போதும் ரசித்திடும் சாத்தியங்களை
உயிர்ப்பித்துக் கொண்டே இருப்பதன்
இன்னொரு பெயர்
வாழ்க்கை

- ஸ்ரீநிவாஸ் பிரபு

## மகிழ்ச்சி ஆத்திச்சூடி

அரசனுக்கு வெற்றியில் மகிழ்ச்சி
ஆலயம் செல்ல பக்தனுக்கு மகிழ்ச்சி
இயல்பானவனுக்கு உண்மையில் மகிழ்ச்சி
ஈகை குணம் கொண்டவனுக்கு ஈதலில் மகிழ்ச்சி

உழவனுக்கு உழுவதில் மகிழ்ச்சி
ஊருக்கு பண்டிகையில் மகிழ்ச்சி
எழுத்தாளனுக்கு எழுத்தில் மகிழ்ச்சி
ஏழு சீர்களுக்கு திருக்குறளில் மகிழ்ச்சி

ஐந்து கரத்தனுக்கு அருகம்புல்லில் மகிழ்ச்சி
ஒருவனுக்கு ஒருத்தி மகிழ்ச்சி
ஓராயிரம் விண்மீன்களுக்கு மின்னுவதில் மகிழ்ச்சி
ஔவைக்கு விநாயகனை தொழுவதில் மகிழ்ச்சி

- சுஜாதா சுவாமிநாதன்








Click the book to read the magazine

மகிழ்ச்சிக்கு மொழி ஒரு தடையில்லை.
புதிய முயற்சியாக ஆங்கிலத்திலும் மலர்கிறது
ஞானகுரு மகிழ்ச்சி. எளிய மொழியில்
எல்லோருக்கும் கிடைக்கட்டும் மகிழ்ச்சி.

happiness only real when shared

# நட்சத்திரங்களைக் காண இருள் தேவைப்படுகிறது...



**ஹா**லிங்பெல் அலறியது. தூங்கிக் கொண்டிருந்த பவித்ரா சட்டென்று கண் விழித்தாள். பக்கத்தில் கணவனும், குழந்தையும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர். இரவு 1 மணி. இந்த நேரத்தில் யார் ஹாலிங் பெல் அடிப்பது என்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். அண்ணனின் மகள் ஷாலு முகம் முழுக்க கோபத்துடன் நிற்பது தெரிந்தது.

கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறாள். வீட்டு வாசலுக்கு வெளியே அவள் வந்த ஸ்கூட்டி தாறுமாறாகக் கிடந்தது. ஏதோ சண்டை நடந்திருக்கிறது, கடும் கோபத்தில் வீட்டைவிட்டு ஓடிவந்திருக்கிறாள் என்பது புரிய, சட்டென்று கதவைத் திறந்து உள்ளே இழுத்தாள்.

”அத்தை, உங்க அண்ணன் போன் செஞ்சா, நான் இங்கே இல்லைன்னு சொல்லணும், அதுக்கு சரின்னா... இருக்கேன். இல்லைன்னா சொல்லுங்க, எனக்குன்னு ஆளுங்க இருக்காங்க... நான் போய்க்கிட்டே இருக்கேன்...” இன்னமும் சூடாக குதித்தாள். அவள் சொல்லி முடிக்கும் முன்னரே செல்போன் சிணுங்கியது. சட்டென்று எடுத்துப் பேசினாள்.

”என்னண்ணா..?”

.................................

”எதுக்கு அவகிட்டே சண்டை போடுறே...?”

................................

டீன் ஏஜ் வயதுக்கே உரிய பிடிவாதம். நிஜம் தெரியாத வயசு. இப்போது அவளிடம் என்ன பேசினாலும், அதற்கு ஒரு பதில் வைத்திருப்பாள் என்பதால், அத்தனையையும் அமைதியாக கேட்டுவிட்டு எழுந்தாள்.

"சரி, வந்தா சொல்றேன். யாராவது ஃப்ரண்ட் வீட்டுல பத்திரமா இருப்பா. காலையில பேசிக்கலாம், இப்ப யாரையும் எழுப்பாம நிம்மதியா தூங்கு" என்றுசெல்போனை அணைத்துவைத்தவள், " பதறிப்போய் கேட்குறாரு..." என்றாள்.

''ம்.. நான் எங்காவது விழுந்து செத்தா நல்லதுன்னு நினைப்பாரு உங்க அண்ணன், அவருக்கு ஜோடியா வந்து சேர்ந்திருக்கு பாரு, அம்மான்னு எனக்குன்னு..." என்றபடி சோபாவில் அமர்ந்தாள்.

''ஏதாவது சாப்பிட்டியா.. ஏதாச்சும் ரெடி செய்யவா?"

"அதெல்லாம் முடிஞ்சதும்தான் சண்டை..."

''என்னதான் உன் பிரச்னை...'' என்றபடி ஷாலுவின் அருகே அமர்ந்து அவள் கைகளைப் பற்றியதும் 'கோ'வென அழத்தொடங்கினாள். அவள் அழுதுமுடிக்கட்டும் என்று அமைதியாக காத்திருந்தாள் பவித்ரா.

"என் மேல யாருக்கும் அன்பே இல்லை. நான் மெடிக்கல் படிக்கிறேன்னு சொன்னேன். கொஞ்சம் மார்க்ல போயிடுச்சு, எப்படியாவது பணம் கட்டி சீட் வாங்கியிருக்கலாம். அதுதான் இல்லை. அவங்க சொன்னதுக்காகத்தான் பி.எஸ்.சி. சேர்ந்தேன். இப்ப எதுக்கெடுத்தாலும் சந்தேகம், கோபம். ஃப்ரண்ட்ஸ்கூட பீச்சுக்குப் போகக்கூடாதாம், வெளியே சுத்தக் கூடாதாம்... என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து கோவா போறாங்க, என்னை போகக்கூடாதுன்னு சொல்றாங்க.."

"அதான் சண்டையா?"

"அது போன மாசமே முடிஞ்சிடுச்சு, இப்போ போன் புதுசு வாங்கித்தர மாட்டாங்களாம்.. எல்லாப் பொண்ணும் மூணு மாசத்துக்கு ஒண்ணு மாத்துறாங்க, நான் இதை வச்சிக்கிட்டே ரெண்டு வருஷமா அழுவுறேன். ஒன் ப்ளஸ் புதுசா வந்திருக்கு, வாங்கித்தர மாட்டாங்களாம். போன வாரம் ட்ரெஸ் வாங்கித்தர்றேன்னு கூட்டிட்டுப் போனாங்க. ஏழாயிரம் ரூபாய்க்கு வாங்கித்தர மாட்டாங்களாம்.

நாளைக்கு என் ஃப்ரண்ட் ஒருத்திக்கு பர்த் டே. எல்லோரும் சேர்ந்து கிஃப்ட் வாங்கித் தரப்போறோம், அதனால ரெண்டாயிரம் கேட்டா சண்டைக்கு வர்றாங்க, நாளைக்கு நைட் 12 மணிக்கு சர்ப்ரைசா



## மந்திரச்சொல்

தீர்வுகளில் கவனம் செலுத்துங்கள், பிரச்னைகளில் அல்ல.

அவ வீட்டுக்குப் போகவும் விட மாட்டாங்களாம், அதான் இன்னைக்கே ஓடி வந்துட்டேன்... இனிமே நான் அங்கே போறதா இல்லை. காலையில என் ஃப்ரண்ட்ஸ்கூட சேர்ந்து ஏதாச்சும் ஒரு ஹாஸ்டல்ல தங்கப் போறேன்... இன்னைக்கு ஒரு நைட் மட்டும் இடம் குடுத்தா போதும்..." என்று கண் நிறைய அழுகையுடன் பேசி முடித்தாள்.

டீன் ஏஜ் வயதுக்கே உரிய பிடிவாதம். நிஜம் தெரியாத வயசு. இப்போது அவளிடம் என்ன பேசினாலும், அதற்கு ஒரு பதில் வைத்திருப்பாள் என்பதால், அத்தனையையும் அமைதியாக கேட்டுவிட்டு எழுந்தாள்.

"நான் இத்தனை தூரம் சொல்றேன், கேட்டுட்டு பேசாமப் போறீங்க, நீங்களும் உங்க அண்ணனுக்குத்தான் சப்போர்ட்டா...?'' என்று ஷாலு எழுந்தரிக்க முயல, சட்டென்று அவளருகே மீண்டும் அமர்ந்தாள்.

"இல்லேம்மா... திடீர்னு நைட் 12 மணிக்கு வயசுப் பொண்ணு வெளியே போறதை அண்ணனால ஏத்துக்க முடிஞ்சிருக்காது, ஆமா , நீ பொண்ணுங்ககூட மட்டும்தான போறே..."

"ம்... கிளாஸ்ல பசங்க படிக்க மாட்டாங்களா, அவங்களும்தான் வருவாங்க, ஒரு பையன் கார்ல கூப்பிட வருவான், நாலு பசங்க மூணு பொண்ணுங்க சேர்ந்து நைட் 12 மணிக்கு என் ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போய் கேக் வெட்டிட்டு ஜாலியா கொஞ்சநேரம் பேசிட்டு நைட் 2 மணிக்கு வந்துடுவோம்..."

ஷாலுவின் அசட்டுத் துணிச்சலைக் கேட்க பயமாக இருந்தாலும், அதை சொல்லமுடியாமல் வெறுமனே சிரித்துவைத்தாள்.

"நான் செகண்ட் ஷோ போறதுக்கே எங்கண்ணன் விட மாட்டான், நான் பேசுறேன்.. .நீ தூங்கு.."

"இல்லை, நான் வீட்டுக்குப் போகமாட்டேன்" என்றாள்.

"சரிம்மா... நீ வீட்டுக்குப் போகவேண்டாம், காலையில பார்த்துக்கலாம்... ரெஸ்ட் ரூம் போயிட்டு வா... நான் போர்வை எடுத்துட்டு வர்றேன், ரெண்டு பேரும் ஹால்ல படுத்துக்கலாம்" என்றபடி எழுந்தாள்.

ஷாலு பாத்ரூம் போய்வர பாலை சுட வைத்துக் கொடுத்தாள். முகத்தைக் கழுவிவிட்டு பளீச்சென வந்து பெட்ஷீட்டில் அமர்ந்த ஷாலு கையில் பாலை கொடுத்ததும், ஆர்வமாக வாங்கிக் குடித்தாள்.

"தேங்க்ஸ் அத்தை... எங்கே பாலு தூங்கிட்டு இருக்கானா..?"

"ம்.. பாலு, மாமா ரெண்டு பேரும் டி.வி.யில ஏதோ படம் பார்த்துட்டு லேட்டாத்தான் படுத்தாங்க... பாவம், அண்ணன் யாருக்கெல்லாம் போன் போட்டு கொடுமைப் படுத்துதோ..?"

"யாரு, உங்க அண்ணனா..? அவருக்கு நான் செத்தாலும் கவலை இல்லை... இந்நேரம் ரெண்டு பேரும் நிம்மதியா தூங்குவாங்க..."

"அப்படி பேசாத ஷாலு, உனக்காகத்தான் ரெண்டு பேரும் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க... உன்னைவிட்டா அவங்களுக்கு யாரு இருக்கா...?"

"நல்லா சொல்றீங்க, எங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நான் வேண்டாம். தினமும் நாலு கோயிலுக்குப் போயிட்டு வந்தா போதும்... கோபத்தைக் கிளறாதீங்க... இப்ப தூங்கியிருப்பாங்க... வேணும்னா போன் செஞ்சு பாருங்க..."

"அப்படி இருக்காதும்மா..."

''உங்களுக்குத் தெரியாது... எனக்கு போறதுக்கு எங்கேயும் இடம் இல்லை, எப்படியும் திரும்பி அவங்க வீட்டுக்கு வருவேன்னு ரொம்பவும் திமிரா இருப்பாங்க... புத்தகம், சர்டிஃபிகேட் கேட்டு கால்ல விழுவேன்னு நினைப்பாங்க.... அவங்களைப் பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு பொம்மை மாதிரி அவங்க சொல்றதைக் கேட்கணுமாம்.."

"இன்னும் தூங்கியிருக்க மாட்டாங்க ஷாலு, ஒண்ணு செய்யலாம், நேர போய் தூரமா நின்னு பார்த்துட்டு வரலாமா..? அவங்க தூங்கியிருந்தா நீ சொல்றது சரி, அப்படியே என் கூட வந்திரு... நாளைக்கு உனக்கு நானே ஒரு நல்ல ஹாஸ்டல் பார்த்து தங்க வைக்கிறேன்..."

"நிஜமா...?" சட்டென்று எழுந்தால் ஷாலு. "சரி, வாங்க... ரெண்டு பேரும் போய் பார்ப்போம். தூங்கிக்கிட்டுதான் இருப்பாங்க. நானே ஒரு ஹாஸ்டலுக்குத்தான் போகலாம்னுதான் இருக்கேன். சொல்றதை செய்வீங்கன்னு பிராமிஸ் பண்ணுங்க.. நான் வர்றேன்..." எழுந்தாள்.

பவித்ராவுக்கு சந்தோஷமாக இருந்தது. அவளுக்கு அண்ணனைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால் சத்தம் போடாமல் சுடிதார் மாட்டிக்கொண்டு வந்தாள். வீட்டைப் பூட்டினார்கள்.

"என் ஸ்கூட்டியிலே போயிடலாம், எப்படியும் திரும்பித்தானே வரப்போறோம்" என்று தன்னுடைய ஸ்கூட்டியைக் கிளப்பினாள் பவித்ரா. தாவி ஏறிக்கொண்டாள் ஷாலு.

தூரத்தில் அபார்ட்மென்ட்டைப் பார்த்ததுமே பவித்ராவுக்கு நெஞ்சுக்குள் பகீரென்றது. அத்தனை வீடுகளிலும் லைட் எரிந்துகொண்டிருக்க, வாசலில் நின்றபடி அண்ணி அழுதுகொண்டிருந்தாள். அருகே போலீஸ் ஜீப்பில் இன்ஸ்பெக்டரிடம் அண்ணன் பேசுவது தெரிய, அருகே போய் வண்டியை நிறுத்தினாள் பவித்ரா.

"யாருக்கும் தெரியாம கண்டுபிடிங்க சார், பொம்பளைப் பிள்ளை சார். அந்தப் பொண்ணுக்கு எதுவும் தெரியாது... சின்னக் குழந்தை சார்" கிட்டத்தட்ட அழும் நிலையில் இருந்த அப்பாவைப் பார்த்ததும் ஷாலு சட்டென்று வண்டியில் இருந்து குதித்து அப்பாவைக் கட்டிப் பிடித்தாள்.

நட்சத்திரங்களைக் காண இருள் தேவைப்படத்தான் செய்கிறது என்று சிரித்துக்கொண்டாள் பவித்ரா.









## 25 புத்தகங்கள் 500 ரூபாய்...

ஞானகுரு வழங்கும் மகிழ்ச்சி தமிழ் மாத இதழ் மற்றும் ஹேப்பினஸ் ஆங்கில மாத இதழ்களின் அத்தனை பிரதிகளும் வேண்டுமா..? கீழ்க்கண்ட எண்ணுக்கு ஜிபே மூலம் 500 ரூபாயுடன் உங்களுடைய மெயில் ஐடி அனுப்பிவையுங்கள். அத்தனை மின் இதழ்களும் அனுப்பிவைக்கப்படும்.

**GPAY : +91 72997 53999**


www.gyanaguru.com

# எம் மனைவி காணாம போயிட்டாங்க

## அத்தியாயம்-25

மனிதருக்கு நிகழும் ஒவ்வொரு செயலுக்கும் அதாவது நன்மைகள் மட்டுமின்றி தீமைகளுக்கும் அவரது ஆழ்மனமே காரணமாக அமைகிறது என்பதை இந்த தொடரில் அழுத்தமாகப் பதிவு செய்து, அதற்கு ஆதார உதாரணங்களையும் பார்த்து வருகிறோம். ஒருவரது எண்ணம், செயல், சிந்தனை ஆகியவை நல்ல வழியில் இருக்கும்போது, அவரது வாழ்க்கையும் சரியான வழியில் நகர்கிறது.

இந்த வகையில், ஒருவரது வாழ்க்கையை மட்டுமின்றி அவருடைய ஆயுட்காலத்தையும் அவருடைய ஆழ்மனமே நிர்ணயம் செய்கிறது. ஆம், மனிதரின் ஆயுட் காலத்தை பயோ கிளாக் எனப்படும் அவரவர் உடல் கடிகாரமே முடிவு செய்கிறது.

**ஆழ்மனமே தாழ் திறவாய்!**

ஏதேனும் அவசரப்பணிக்காக அதிகாலை 3:30 எழவேண்டிய அவசியம் இருக்கிறது என்று அலாரம் வைத்துவிட்டு படுப்பார்கள். உறக்கத்துக்குப் போய்விட்டாலும், மிகச்சரியாக மூன்றரை மணி ஆவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே சிலருக்கு விழிப்பு வந்துவிடும். இப்படி ஒருவரை உசுப்பிவிடுவதே உடல் கடிகாரம். அவர் தூங்கினாலும், அவரது உணர்வுகள் தூங்காமல் விழித்திருந்து சரியான நேரத்திற்கு எழ வைக்கிறது.

நிறைய பேர் இந்த உடல் கடிகாரத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார்கள். இரவில் எத்தனை மணிக்கு படுத்தாலும் அதிகாலை 5 மணிக்கு அலாரம் வைக்காமலே எழுந்துவிடுவார்கள். அதேபோல், ஒவ்வொரு வேலையையும் எந்தெந்த தருணங்களில், எந்த ஆர்டரில் முடிக்க வேண்டும் என்றும் மனதுக்குள்ளே கணக்குப் போட்டு, அதன்படி தெளிவாக செய்து முடிப்பார்கள்.

இந்த உடல் கடிகாரமே அவரவர் ஆயுட் காலத்தை நிர்ணயம் செய்கிறது என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களில் பெரும்பாலோர் 60 வயதுக்குள் இயற்கை மரணம் அடைகிறார்கள் என்றால், அந்த குடும்பத்தைச் சேர்ந்த புதிய தலைமுறை ஆண்களால் அதிகபட்சம் 65 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ முடிவதில்லை. ஏனென்றால், அவர்களை அறியாமலே இந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களால் 60 வயதிற்கு மேல் வாழ முடியாது என்ற கணக்கு ஆழ்மனதில் பதிந்துவிடுகிறது. எனவே, எத்தனை சிறப்பாக உடலை கவனித்துக்கொண்டாலும் 60 வயதைத் தாண்டியதும் தங்கள் நம்பிக்கையை இழக்கத் தொடங்குகிறார்கள். சின்னச்சின்ன உடல் உபாதைகளையும் பெரிய நோய்களாக கற்பனை செய்து, மரணத்தை நோக்கி செல்கிறார்கள்.

அதே குடும்பத்தில் பெண்கள் 75 வயதுக்கு மேல் மரணம் அடைகிறார்கள் என்றால், அந்த வயதுக்கு ஏற்ப அவர்களும் உடல் கடிகாரத்தை செட் செய்திருக்கிறார்கள் என்று அர்த்தம். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் பெரும்பாலோர் 100 வயதுக்கு தங்கள் உடல் கடிகாரத்தை செட் செய்துவிடுகிறார்கள். அதனால், அவர்களால் சுலபமாக அத்தனை காலம் வரையிலும் தாக்குப்பிடிக்க முடிகிறது.

அப்படியென்றால், குறைந்த ஆயுள் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர்களால் கூடுதல் ஆயுசு வாழவே முடியாதா..?

நிச்சயம் முடியும். அதற்கு அவர்கள் தங்கள் ஆழ்மனதின் மீது பெரும் நம்பிக்கை வைக்க வேண்டும். தங்களால் 100 வயது வரையிலும் வாழமுடியும் என்று நம்புபவர்களால், நிச்சயம் அதை நோக்கி பயணிக்க முடியும். 100 வயது வரையிலும் வாழ விரும்புபவர்கள் தங்கள் வாழ்க்கையை ஏதேனும் வகையில்




www.gyanaguru.com

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 3 - 1

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyanaguru.com

சுவாரஸ்யம் கொண்டதாகவும் சுறுசுறுப்பாகவும் அமைத்துக்கொள்வது நல்லது. வேலை இருக்கிறதோ இல்லையோ, தினமும் காலையில் எழுந்து குளிப்பது, வெளியே எங்காவது சென்று வருவது என்று பிஸியாக வைத்துக்கொண்டால் போதும். அதேநேரம், தங்களால் நீண்ட காலம் வாழ முடியும் என்ற எண்ணத்தை பல வகையிலும், பிறரிடம் விதைப்பதும் நல்ல முறையில் பயனளிக்கிறது.

100 ஆண்டு வாழ ஆசைப்படும் நபர்கள் தங்கள் உடலை ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் பராமரிக்க வேண்டியது முதல் கட்டாயம். தினமும் குறைந்தது அரை மணி நேரம் உடற்பயிற்சி, வயிற்றுக்கு நல்ல உணவு, ஓய்வு தரும் வகையில் உறக்கம், மனதுக்கு மகிழ்ச்சி போன்றவை நிம்மதியும், 100 வயது வாழமுடியும் என்ற நம்பிக்கையையும் ஆழ்மனதிற்கு கொடுக்கிறது.

நீண்ட ஆயுளுக்கு ஆழ்மனம் ஆசைப்பட்டால், அதை நிச்சயம் உடல் நிறைவேற்றிக் கொடுக்கும். எனவே, ஒவ்வொரு நபரும் தங்கள் உடல் கடிகாரத்தை வலுவாகவும், புத்திசாலித்தனமாகவும் வடிவமைத்தாலே போதும், ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளும் பெறமுடியும்.

இப்போது, நிறைய வாசகர்கள் எதிர்பார்க்கும் ஒரு விஷயம் குறித்து எழுதவேண்டியிருக்கிறது. தேவையான அளவுக்கு பணம், வசதி, உதவி, பாராட்டு, அந்தஸ்து இல்லை என்பதுதான் நிறைய மனிதர்களின் வாழ்க்கை போராட்டமாக இருக்கிறது. எப்படியாவது கடினமாக உழைத்து, ஆசைப்பட்ட எல்லாவற்றையும் அடைய நினைக்கிறார்கள். ஆசைப்பட்டதை அடைவதற்கு ஓடிக்கொண்டிருக்கும் மக்களே இந்த பூமியில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்களுடைய அதிகபட்ச எதிர்பார்ப்பு என்றால் ஒரு வீடு, ஒரு கார், போதிய சேமிப்பு என்பதாகவே இருக்கிறது. ஆனால், இதுவே கிடைக்காமல்தான் காலம் முழுக்க கஷ்டப்படுகிறார்கள். அதேநேரம், வீடு, கார், சேமிப்பு போன்றவற்றில் தன்னிறைவு அடைந்தவர்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்களா..? இல்லை என்பதுதான் உண்மையான பதில். ஏனென்றால் இவர்களுக்கு எல்லாம் இருந்தும், எப்படி மகிழ்ச்சி அடைவது என்பது தெரியவில்லை.

கணவன், மனைவி இருவருக்கும் நல்ல சம்பாத்தியம், வீடு வாங்கிவிட்டார்கள், கார் வாங்கிவிட்டார்கள், பிள்ளையை நல்ல தரமான பள்ளியில் சேர்த்துவிட்டார்கள். வீட்டுக்குத் தேவையான அத்தனை பொருட்களும் வாங்கி குவித்துவிட்டார்கள். அதன்பிறகு எதை நோக்கி ஓடுவது என்றுதான் நிறைய பேருக்குப் புரியவில்லை. வாரம் ஒரு நாள் ஹோட்டல், மாதம் ஒரு நாள் சுற்றுலா சென்றபிறகும் அவர்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லை.

எதற்காக இப்போது ஓடியாடி வேலை செய்கிறோம், இதற்கு மேல் பணம் சம்பாதித்து என்ன செய்யப் போகிறோம், எப்படி பொழுதை இனிமையாகக் கழிப்பது என்றெல்லாம் புரியாமல் தவிக்கிறார்கள். இதுவே அவர்களுக்கு மிகப்பெரும் மன அழுத்தத்தைக் கொடுத்துவிடுகிறது. இதனாலே ஒருவரையொருவர் சண்டை போட்டுக் கொள்வது அதிகரிக்கிறது.

நிறைய பணம் இருப்பதும் பிரச்னையாகுமா என்று சந்தேகப்படவே வேண்டாம். ஏகப்பட்ட செல்வமும் செல்வாக்குமாக இருந்த புத்தர் தான், அத்தனையையும் தூக்கிப் போட்டுவிட்டு ஆண்டியாகிப் போனார்.

“எப்படியாவது கடினமாக உழைத்து, ஆசைப்பட்ட எல்லாவற்றையும் அடைய நினைக்கிறார்கள். ஆசைப்பட்டதை அடைவதற்கு ஓடிக்கொண்டிருக்கும் மக்களே இந்த பூமியில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்களுடைய அதிகபட்ச எதிர்பார்ப்பு என்றால் ஒரு வீடு, ஒரு கார், போதிய சேமிப்பு என்பதாகவே இருக்கிறது. ஆனால்,”



அப்படியென்றால் பணத்தில் நிம்மதி இல்லையா..? பணத்துக்கும் மகிழ்ச்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுதான் உண்மை. பணம் இருப்பவர்களும், அடுத்த லட்சியம் இல்லாதவர்களும் சந்தோஷமாக இருக்க முடியும் என்பதற்கு உதாரணம் சஞ்சய்.

ஒரு நாள் சஞ்சய் வீட்டுக்குப் போன நேரத்தில் அவர் மட்டுமே இருந்தார். மனைவி எங்கே என்று கேட்டபோது, ‘‘என் மனைவி காணாமல் போய் இரண்டு நாளாச்சு…” என்று சொன்னார்.

‘‘மனைவியைக் காணவில்லை என்பதை எப்படி இத்தனை கூலாக சொல்கிறீர்கள்… போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டீர்களா..?” என்று கேட்டதற்கு இல்லை என்பது போல் தலையாட்டிவிட்டு பேசத் தொடங்கினார்.

‘‘நான் சொன்னதைக் கேட்டு நீங்கள் ரொம்பவே பதற வேண்டாம். இது எங்களுக்குள் நடக்கும் ஒரு விளையாட்டு…” என்றார்.

‘‘அதென்ன காணாமல் போவது ஒரு விளையாட்டா..?”

‘‘ஆம், எங்கள் மகள் இப்போது +2 படிப்பதால் ஹாஸ்டலில் சேர்த்திருக்கிறோம். நாங்கள் இருவர் மட்டுமே வீட்டில் இருக்கிறோம். தினமும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பது போரடித்துவிடக் கூடாது என்பதற்காக அவ்வப்போது இப்படி விளையாடுவோம்… அதாவது என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் எங்காவது இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வருவார். அவரது அம்மாவின் வீட்டுக்குப் போயிருக்கலாம் அல்லது யாருடனாவது டூர் போயிருக்கலாம். இரண்டு நாட்கள் கழித்து வருபவரிடம் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருக்கும். அதேபோல் நானும் அவ்வப்போது எங்காவது திடீரென சொல்லிவிட்டு காணாமல் போய்விடுவேன்…”

‘‘ஏன் சொல்லிக்கொண்டு போனால் என்ன..?”

‘‘சொல்லிக்கொண்டு போனால் அவர் என்ன செய்கிறார், எங்கே இருக்கிறார் என்று அப்டேட் செய்ய வேண்டிய பொறுப்பு வந்துவிடும். அப்படிப்பட்ட குறுக்கீடு இல்லாமல் அவருக்கு என்று இரண்டு நாட்கள், எனக்கென்று சில நாட்கள் சுதந்திரமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். இப்போதும் ஏதாவது அவசரம் அல்லது அவசியம் என்று நான் போன் செய்தால் உடனே பேசுவார், அவசரம் என்று சொன்னால் உடனடியாக திரும்பிவிடுவார்… ஆனால், அவர் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்துவிட்டு திரும்பிவந்தால் இங்கேயும் மகிழ்ச்சி வரும்… அதனாலே அவ்வப்போது காணாமல் போகிறோம்…”

‘‘வீட்டில் இருந்தபடியே உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையா..?”

‘‘மகிழ்ச்சியாகவே இருக்கிறோம். ஆனால், அது போதுமானதாக இல்லை என்பதுதான் உண்மை. உதாரணத்துக்கு நான் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஓடிடி தளத்தில் சினிமா பார்க்க அமர்கிறேன். எனக்கு பிடித்திருந்தால் முழு சினிமாவையும் பார்த்துவிடுவேன். சில நேரங்களில் இரவு 1 மணிக்கு மேலாகும். இதையே மனைவி வீட்டில் இருக்கும்போது, அவர் நிச்சயம் அனுமதிக்க மாட்டார். என்னுடைய உடல் கெட்டுப்போகும் என்று கட்டுப்படுத்துவார். இது என்னுடைய சுதந்திரம் என்று அவரிடம் கோபப்படுவதைவிட, அவருடைய கரிசனத்துக்கு மதிப்பு கொடுத்து அடங்கி விடுவேன். அவர் இல்லாத நேரங்களில் இதுபோன்ற கூடுதல் சுதந்திரங்களை அனுபவித்துக் கொள்கிறேன். என்னை போலவே அவருக்கும் சில சுதந்திரங்கள் கிடைக்கலாம்… அதை அனுபவிக்கிறார். அதனால், இப்போது நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம்…” என்றார்.

இது சரியான செயல்தானா.. இந்த மகிழ்ச்சியை தொடரலாமா என்றெல்லாம் யோசித்து வையுங்கள்

**- அடுத்த இதழில் பார்க்கலாம்.**


www.gyanaguru.com

## கணவன், மனைவி,
## பெற்றோர், குழந்தைகள்,
## காதலர்கள் என
## உறவுகளுக்குள் எழும்
# குழப்பங்களுக்கு
# கவுன்சிலிங்...



**திருமணத்திற்கு முன்... திருமணத்திற்கு பின்...**

**சிறப்பு ஆலோசனைகள்**

தொடர்புக்கு

**GG Relationship Counseling**

+91 80725 89355